KALIYAN VANAMAMALAI

11376

RAMANUJA SWAMY

VAIBHAVA SANGRAHAM

11376

By:- SHADAGOPACHARYA

year - 1934

Kaliyan Vanamalai
Ramanuja swami vaibhav
Swam

ஸ்ரீ:



ஸ்ரீவானமாமலை (தோதாத்ரி) மடம் 25-வது
பட்டத்தை அலங்கரித்து எழுந்தருளியிருந்த
ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ
ஸ்ரீகலியன் வானமாமலை
ராமாநுஜஸ்வாமி,

# வைபவ ஸங்க்ரஹம்.



இஃது
வானமாமலை சிரோமணி சடகோபாசார்யரால்,
அம்பாசமுத்திரம்,
ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸில் அச்சிட்டு,
வெளியிடப்பட்டது.

ஸ்ரீமுக-ஸூ தைமீ".

ஸ்ரீ:



ஸ்ரீ வானமாமலை மடம் 25-வது பட்டம்

ஸ்ரீ கலியன் வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அவதாரிகை.

ஸ்ரீய: பதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், பரமகாருணிகனாயிருக்கிற ஸர்வேச்வரன் விண்ணாட்டவரோடொருகோவையாகத் தன் திருவடிகளிலாள்ப்பட்டு வாழ்கைக்கு ப்ராப்தியுண்டாயிருக்கச் செய்தேயும் அத்தைலபிக்கப்பெறாதே ஸம்ஸாரஸாகரத்தில் உழன்று திரிகிற சேதனர்களுடைய யிழவை யநுஸந்தித்து உண்டதுருக்காட்டாதே இவர்கள் ஸதஸத் விவேகம் பண்ணுகைக்கடியாக சாஸ்த்ர ப்ரதானம் பண்ணியருளினான். அது நிஷ்ப்ரயோஜனமானவாறே "சோம்பாதிப் பல்லுருவையெல்லாம் படர்வித்த வித்தா," என்கிறபடியே தானே எங்நின்றயோநியுமாய் பிறந்தவிடத்திலும் அஃதே "அவஜாநந்தி மாம் மூடா:" என்கிறபடியே ஆஸுரப்ரக்ருதிகளான வனேகர்க்கு அத: பதிக்கைக்கு உடலாகக் காண்கையாலே இனி மிருகம் வைத்து மிருகம் பிடிப்பாரைப்போல ஸஜாதீயரைக்கொண்டே இவர்களைத் திருத்தவேணுமென்று பார்த்து நித்திய ஸம்ஸாரிகளில் சிலரை நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு இலக்காக்கினான்.

அவர்களாகிறார், காரிமாறன் முதலான ஆழ்வார்களும் நாதமுனிகள் துடக்கமான ஆசார்யர்களும். ஆழ்வார்களைக்காட்டிலும் ஆசார்யர்களுக்காயிற்று ஸம்ஸாரிகள் விஷயத்தில் உபகாரம் விஞ்சியிருப்பது. அதின்படியென்னில் ஆழ்வார்கள் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளில் ஆழங்கால் பட்டு அவனை யநுபவிக்க விழிந்து அது கிடையாதபோது கலக்கமும் அதின் லாபத்தில் தெளிவும் உடையர்களாய், யேதேனும் ஒருபொழுதாயிற்று பரோபதேசப்ரவ்ருத்தராய்ப் போருவது. ஆசார்யர்களோவென்னில் பிறர் துர்க்கதியேகண்டு க்ருபாமாத்ர ப்ரஸன்னர்களாய், பயனன்றாகிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்தியாயிற்றுப் பணிகொண்டு போருவது. ஆழ்வார்களுக்குப் பரோபதேசம் காதாசித்கமானாப் போலே இவர்களுக்கு பகவதநுபவம் காதாசித்கமாய் நடையாடும். மற்றைப்பொழுதோவெனில், பரோபதேசமேயாயிற்று யாத்ரையாய்ப் போருவது. இன்னமும், ஆழ்வார்களுடைய அநுபவ பரீ

வாஹரூபமான அருளிச்செயலின் அர்த்த விசேஷங்களை நாத முனிகள் தொடக்கமான நம்மாசார்யர்களன்றோ வெளியிட்டு உலகுய்யச் செய்தது. ஸர்வேச்வரன் தானும் தன்னுடைய அவதாரவிசேஷங்களில் பலதடவை ஆசார்யத்வத்தை ஸ்வீகரித்தும் அவனடியார்களது ஆசார்யத்வம்போலே பலம்பெருமல் அன்றோ அத்தை அடியார்களுக்கு அஸாதாரணமாக்கியருளினான்.

அவ்வாசார்யர்களில் தலைவராயிற்று எம்பெருமானார். அவர் தாம் தம்முடைய அவதாரத்தில் வைதிக மார்க்கத்தை நிஷ்கண்டகமாகச் செய்வதிலே ஊன்றிப் போந்தவராகையாலே மாறன் கலையே உணவாகப்பெறுகைக்கும், களையெடுத்த பயிரைக்காண ஆவல்கொள்ளும் காவலனைப்போல நிஸ்ஸபத்நமாக பகவத்விஷயத்தைத் தாமும் குறைவற அநுபவித்துத் தம்மடியாரனைவர்க்கும் அருளுகைக்கும் மறுபடியும் மணவாள மாமுனிகளாக அவதரித்தருளி பூர்வாவதாரத்தில் உண்டான இழவெல்லாந்தீர நிஷ்கண்டகமாக பகவத் விஷயங்களைத் தாம் ஆச்ரிதரனைவருடன் அஜ்ஞரோடு விசேஷஜ்ஞரோடு ஸர்வஜ்ஞரோடு வாசியற யாவரும் இன்பமுறும்படி அனவரதம் அருளிச்செய்துகொண்டு அரங்கமா நகரில் அடியார்கள் புடைசூழப் பல்லாண்டு காலம் எழுந்தருளியிருந்தார். இப்படி மகாவைபவத்துடன் எழுந்தருளியிருந்த யதிவர புநரவதாரமான பெரிய ஜீயர் திருவடிகளில் அபிஜநவித்யா வ்ருத்தங்களில் குறைவற்றவர்களான ஆசார்ய புருஷர்களனைவரும் அவரது வைபவங்கண்டு வானமாமலை ஜீயர் புருஷகாரமாக ஆச்ரயியாநிற்கச்செய்தே, எம்பெருமானார் திருவடிகளில் முதலியாண்டான் போலப் பெரிய அண்ணன் ஸகுடும்பமாக அழகியமணவாளமாமுனி திருவடிகளில் ஆச்ரயிக்க ஒருப்பட்டார். அப்பொழுது மணவாள மாமுனிகள்போர உகந்து பெரிய அண்ணனுக்குப் பஞ்சஸம்ஸ்காரம் ப்ரஸாதித்தருளினதும் தம்முடைய சீரிய சிங்காதனத்தில் வானமாமலை ஜீயரை எழுந்தருளியிருக்கச்செய்து, தமது திருவிலச்சினைகளையும் அவர் திருக்கையில் ப்ரஸாதித்தருளி, நமக்குண்டான அதிசயமெல்லாம் ஜீயருக்கும் உண்டு காணும்! என்று அருளிச்செய்து அப்பாச்சியாரண்ணா முதலானோரை அவர் திருவடிகளில் ஆச்ரயிக்கும்படி நியமித்தருள, வானமாமலை ஜீயரும் அப்பாச்சியாரண்

ணுவுக்குப்பஞ்சஸம்ஸ்காரங்களை ப்ரஸாதித்தருளித் தம்முடைய பாரதந்திரிய காஷ்டையினுல் யதாபூர்வம் எழுந்தருளியிருக்கும் ஸமயத்தில், மணவாளமாமுனிகளுக்கு ஜீயரிடத்தில் உண்டான வாத்ஸல்யாதிசயத்தைத் திருவுள்ளத்தில்கொண்ட பெரிய அண்ணனும் பெரிய ஜீயர் ஸன்னிதியில் அடியேனையும் வானமாமலை ஜீயர் திருவடிகளில் ஆச்ரயிப்பிவிக்காதொழிந்ததே!என்று அனுதபிக்கும்படியாயிற்று ஜீயருடைய வைபவம்.

இன்னமும், பெரிய ஜீயர் திருவடிகளில் இளையபெருமாளைப்போலே அடியே துடங்கி ஆள்பட்டு அவருடைய பஹிச்சர ப்ராணனைப்போலேயும் "நிழலுமடிதாறுமானோம்" என்கிறபடி பாதரேகாஸ்வரூபராயும் எழுந்தருளி இருந்த வானமாமலை ஜீயரைப் பெரிய ஜீயர் எம்பெருமான் தொடங்கி எம்பெருமானாரை மத்யமணியாக உடைய ஓராண்வழியான குருபரம்பராரத்நாவளியில் தமக்குப் பிறகு தர்சனஸ்தாபகராக நியமித்து அவர்களுக்கு அஸாதாரண சின்னமான கணையாழி முதலியதை ப்ரஸாதித்தருளினதும் ஜீயரது அனிதரஸாதாரண வைபவப்ரகாசகம். அத்தைப்பற்றவாயிற்று "வாநமஹாத்ரி லக்ஷ்மணமுநே: கோவாஜகத்யாம்ஸம:" என்று ஆரியரெல்லாம் புகழுகிறதும். இப்படி பெருமதிப்பராய் ஆசார்யாதீனமான ஸத்தாஸ்திதிப்ரவிருத்திகளையுடையராய் ஜ்ஞானவைராக்கியாதி ஸத்குணநிதியாய் எழுந்தருளியிருந்த வானமாமலை ஜீயரும் பெரிய ஜீயருக்குப்பிறகு அவரது நியமனப்படி தர்சனத்தை நிர்வஹித்துக்கொண்டும் ஸமரபுங்கவாசார்யர் முதலிய மஹநீயர்களுக்கு ஸகலார்த்தங்களையும் அருளிச்செய்துகொண்டும் தமக்கு ஸஹஜஸித்தமானதும் ஆசார்யனாலே நியமிக்கப்பட்டதுமான தெய்வநாயகனுடைய ஸ்ரீ கார்யத்தை வானமாமலையில் குறைவற நடத்திக்கொண்டும் தாயை நினைந்த கன்றேபொக்க, பெரியஜீயர் திருவடிகளையே ஸதா த்யாநித்துக்கொண்டும் வானமாமலையிலேயேஎழுந்தருளியிருந்தார். தமக்குப்பிற்காலத்திலும் எம்பெருமானார் தரிசனம் ஓங்கி வளரும்படிக்கும் வானமாமலையினுடைய ஸ்ரீ காரியம் தழைத்தோங்குகைக்குமாக ஞானனுஷ்டாநங்களால் பரிபூர்ணரான ஒரு ஜீயரை நியமித்தருளி இப்படியே விச்சேதமின்றியில எக்காலத்திலும் நடைபெற

வேணுமென்று ஆசாஸித்தருளி விண்ணுடேற எழுந்தருள லானார்.

அதன் பிறகு ஸ்ரீ ஸ்வாமியினுடைய மங்களாசாஸன ப்ரபாவத்தினாலும் அமோகமான நியமனத்தாலும் தம்முடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களால் ஆச்ரிதர்களுடைய அஜ்ஞாநாந்தகாரத்தைப்போக்கி, ஊரும்நாடும் உலகும் தம்மைப்போலாக்கிஅந்வர்த்தமான குர்வாசார்ய சப்தங்களை யுடையர்களாய், வரமங்காநாதனுடைய ஸ்ரீ கார்யத்தை உத்தரோத்தரம்பெருக நடத்திக்கொண்டு பகவத்பாகவதாசார்ய கைங்கர்யைகபோகர்களாய், உபய வேதாந்தோபந்யாஸங்களாலே எவ்விடத்திலும், இராமாநுஜ தர்சனத்தைப் பரவசெய்துகொண்டுபோரும் ஸ்ரீ ஸ்வாமிகளை உடைத்தாய் இப்படி பெரிய ஜீயர் துடங்கி விச்சேதமன்னியில் ஓராண்வழியாகவருகிற ஸ்ரீ வானமாமலை மடத்து குருபரம்பரையில் இருபத்தைந்தாவது ஸ்தானத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்வாமி, தம்முடைய ஸரஸமான ஸ்ரீ பாஷ்யபாத் யுபந்யாஸங்களாலும் மதுரமான பகவத் விஷயாத் யுபந்யாஸங்களாலும் ஸரளமான வசன பூஷணாத் யுபந்யாஸங்களாலும் எம்பெருமானார், நம்பிள்ளை, பெரிய ஜீயர், பொன்னடிக்கால் ஜீயர் இவர்களுடைய அவதார ப்ரயோஜனங்களெல்லாம் தாம் ஒருவராலேயே தம்மடியார்களுக்கு ப்ராப்தமாம்படி செய்துகொண்டு தம்முடைய வைராக்கியத்தால் திருவடி பீஷ்மாதிகளைவென்று பகவத் பக்தியில் ஆழ்வார்களோடும், ஞானத்தில் நாதமுனிகள் துடக்கமான ஆசார்யர்களோடும், பகவத் கைங்கர்யத்தில் அரவணையோடும், பாகவத விஷயத்தில் குலசேகரப் பெருமாளோடும், ஆசார்ய விஷயத்தில் ஸ்ரீ மதுரகவிகளோடும், ஆநிருசம்ஸ்யத்தில் ஆழ்வானோடும் ஸாம்யம் உடையராய் பல்லாண்டு எழுந்தருளியிருந்து உலகத்தை வாழ்வித்தருளினார். இப்படி மஹா ப்ரபாவமுடைய ஸ்ரீ ஸ்வாமி திருவடியில் ப்ராவண்யமுடையார்க்கு இருள்தருமாஞாலமான இவ்விபூதியில் இருக்கும் நாளில் அவருடைய வைபவமே ஸதா அநுஸந்தேயமாகக் கடவது. இத்தை "ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும்" என்று லோக தேசிகனும் அருளிச்செய்தாரிறே.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே வாநமஹாத்ரியோகிநே நம:

## ஸ்ரீவாநமாமலைமடம் ஆஸ்தானத்தில் 25-வது பட்டத்தை அலங்கரித்து எழுந்தருளியிருந்த ஸ்ரீகலியன் வானமாமலை ராமாநுஜஸ்வாமி

# வைபவ ஸங்கிரகம்.

---

ஸ்ரீமத்யதீந்த்ர வரயோகி பதாப்ஜயுக்ம
ப்ரேமாப்திவாநகிரியோகி தயைகபாத்ரம்
வேதாந்தயுக்மவிசதீகரண ப்ரவீணம்
ராமாநுஜம் முநிவரம் ஸததம் நமாமி.

ஸ்ரீ ஸ்வாமி, தெள்ளியார் திருநான்மறைகள் வல்லார் மலிதண் சிரீவரமங்கலநகராகிய வானமாமலை திவ்ய தேசத்தில் எழாட்காலும் பழிப்பிலாத அண்டர்கோனமுதனுக்குத் தொண்டு பூண்டொழுகும் ஸ்ரீவைஷ்ணவத்திருக்குலத்தில், ஈசுவர நாமஸம்வத்ஸரம் சித்திரைமாஸம் அச்வினீ நக்ஷத்திரத்தில், அவதரித்தருளினர்.

ஜாயமானகாலகடாக்ஷ விசேஷத்தாலே வளர்பிறைச்சந்திரன்போல உத்தரோத்தரம் வர்த்தமான திவ்யதேஜஸ்ஸோடே வளர்ந்தருளி, ஸகலகலா பரிபூர்ணராய், தத்காலம் ஸ்ரீமடத்தில் திவ்யாஸ்தாணத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீசடகோபராமாநுஜஸ்வாமியால் ஆமுதல்வன் இவனென்று கடாக்ஷிக்கப்பெற்று அவர் திருவடிகளை ஆச்ரயித்து, அந்தரங்க சிஷ்யராக எழுந்

தருளியிருந்தார். அது ஸமயம் தமது பூர்வவித்யாப்யாஸங்கள் ஒருங்கே உத்புத்தமாயினவென்னலாம்படி குருமுகமாக அதிசீக்கிரத்தில் வேதவேதாங்கங்களில் ஒப்புயர்வற்ற பாண்டித்யத்தைப்பெற்று, உலகோர்கள் புகழவர்த்திக்கலானார். பின்பு, ஸ்ரீபட்டர்பிரான் ஸ்வாமி ஸன்னிதியில் உபயவேதாந்தங்களையுமதிகரித்து, ஸ்வரூபாநுரூபமான ஆசார்யநிஷ்டையையேகடைப்பிடித்து, அவரதுகைங்கர்ய நிரதராகவே விளங்கலானார்.

இப்படி எழுந்தருளியிருக்கும்பொழுது, க்ரோதி வருஷம் மாசிமாஸம் திருவோண நக்ஷத்திரமும் சுக்கிரவாரமும் கூடின சுபதினத்தில் வானிளவரசான வெம்பெருமான் நித்ய விபூதி நிர்வாகத்திற்காக, ஸ்ரீபட்டர்பிரான் ஸ்வாமியைத் திருவுள்ளம்பற்ற, அதையறிந்த ஸ்ரீபட்டர்பிரான்ஸ்வாமியால் நம்மிராமாநுஜஸித்தாந்தத்தை இனி நீரேநிர்வஹிக்கக்கடவீர்என்று நியமிக்கப்பெற்றவராய், ஆசார்யபாரதந்திரிய நிஷ்டை பிரகாசிக்கும்படியாக, ஞானவைராக்யங்களுக்குக்கொள்கலமான ஸ்ரீஸ்வாமி தமது 28-வது திருநக்ஷத்திரத்தில் உத்தமாச்ரமஸ்வீகாரபூர்வமாக, திவ்யஸிம்மாஸநத்தில் எழுந்தருளினார்.

மறுநாள், ஸ்ரீபட்டர்பிரான்ஸ்வாமி திருநாடு அலங்கரிக்க, மடத்தின் விபவத்திற்கும் தமதுப்ராவண்யத்திற்கும் அநுகுணமாக சீரும் சிறப்புமாக அடியார் குழாங்களுடன் அவருடைய சரமகைங்கர்ய மஹோத்ஸவத்தை நடத்தியருளினார்.

பின்பு, நித்ய ஸ்ரீயுடனும் நித்யமங்களத்துடனும் ஒரு ஸம்வத்ஸரம் ஸ்ரீவரமங்கைத்தாயாருடைய கைங்கர்யத்தை நேரில் நடத்திக்கொண்டு, உபயவேதாந்தங்களையும் ஸாங்கோபாங்கமாக காலக்ஷேபம் ஸாதித்து, சாத்துமுறையும் செய்தருளினார்.

இப்படி எழுந்தருளியிருக்கச்செய்தே, “ராமாநுஜார்ய திவ்யாச்ஞா......அபிவர்த்ததாம்” (எவ்விடத்திலும் வளர்ந்தருள வேணும்) என்று திருவுள்ளம்பற்றி எங்கும் எழுந்தருளி தர்சனஸ்தாபனம் செய்யவும், உகந்தருளின நிலங்களில் சிறிதுபொழுது போக்கவும் திருவுள்ளம் உகந்து, அடுத்த வைகாசி மாஸம்

விஜயயாத்திரையை உபக்ரமித்து, கோயில்திருமலைபெருமாள் கோயில் முதலான திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்து கொண்டு, ஸரஸமாயும் மதுரமாயும் கம்பீரமாயுமுள்ள ஸம்ப்ர தாயார்த்த உபந்யாஸங்களாலே ஆங்காங்குள்ள ஸகல சேதனர் களையும் உஜ்ஜீவிக்கச்செய்துகொண்டு ஸ்ரீஜகன்னாதம் வரை எழு ந்தருளி மூன்றுவருஷகாலத்தைமஹோத்ஸவமாகவே கழித்துத் தேறுஞானத்தர் வேதவேள்வியறாச் சிரீவரமங்கல நகரையேறி வீற்றிருக்க எழுந்தருளினார்.

அப்படி எழுந்தருளினதும், கோசக்ருஹத்தில் ஸஞ்சி தமாயிருந்த பொருள்த்திரளைத் திருமகள்கேள்வனுக்கு உடைமை யாக்கவெண்ணி, அப்பொழுது ஜீர்ணமாகவிருந்த ஸ்ரீவைகுண்ட திவ்யவிமானத்தைப்புதுப்பித்துத் தங்கமகுடமிட்டு எங்கும்புக ழும்படி மங்கைமணாளனுக்கு மங்களாபிஷேகம் செய்தருளினார்.

அனந்தரம் சிலகாலம் ஸ்ரீமடத்தில் உபயவேதாந்தங்களை யும் ப்ரவசனம் பண்ணிக்கொண்டு எழுந்தருளி இராநிற்க, ஒரு நாள் ஸ்ரீஸ்வாமியின் யோகத்தில் ஸ்ரீவரமங்கைத்தாயார் எழுந் தருளி, எந்தாய், இந்தவிபூதியில் வடதிசை மதுரை சாளக் கிராமம் வைகுந்தம் துவரை அயோத்தி இடமுடைவதரி என்று வைகுந்தத்தோடு ஓர் அணியாக வகுக்கப்பட்ட உத்தரதிவ்ய தேசங்களையும் மங்களாசாஸநம் செய்துகொண்டு, எங்குமுள்ள வடியார்க்கும் இதமுறைக்கவேணுமென்ற உமது சிந்தனைக்குத் தந்தோமித்தருணம், என்று உகந்து நியமிக்க ஸ்ரீ ஸ்வாமியும்,

பூமகள் தன்நியமனத்தைத் - தாமதமின்றேதமர்காள்,
காவலன்தன் உதவியோடு - பூவலம்வந்தாற்றிடுவன்;

என்று அடியார்கள் குழாங்களைக்கூட்டி ஸங்கல்ப்பித்தருளினார்.

உடனே அவர்களும் அளவிலா ஆனந்தமடைந்து அரசா ங்கத்தாரிடம் ஆங்காங்கு வேண்டிய வஸதிகள் செய்து கொடுக் குமாறு உத்தரவு (ஜி. ஒ. ) வாங்கி தாங்களும் யாத்ராமஹோத் ஸவத்தையநுபவிக்க ஸந்நத்தரானார்கள். அவ்விதமே ஸ்ரீஸ்வா மியும் அடியார்கள் புடைசூழ ப்ரஸ்த்திதராய், வண்பரிசாரம் வாட்டாறு வழியாகத்தடமுடைவயல் அநந்தபுரநகர்புகுந்து

அங்கு நேசம் செய்துறைகின்றானை நெறிமையால் மலர்கள் தூவிப் பூசனை செய்து, அனந்தபுரத்தண்ணலார் கமலபாதமனுகிய மூலம் திருநாளென்ற மஹாராஜாவால் அங்கு விசேஷமாக உபசரிக்கப்பெற்று அவ்விடத்தில் மூன்றுநாள் எழுந்தருளியிருந்தார்.

இங்கு அவ்வரசர்மடத்திற்குநேரில்வந்து, ஸ்ரீஸ்வாமியை தண்டம்ஸமர்ப்பித்து, திருக்கல்யாணகுணங்களுக்குப்பரவசராய் நித்தியபிக்ஷைக்குத்தமது படித்திரத்தைதிருவுள்ளம்பற்றவேணுமென்று பிரார்த்தித்து, அவ்வாறே இப்பொழுதும் அந்தராஜ்யத்திலிருந்து நடந்து வருகிறது ஒரு முக்கிய விசேஷமாகும். அங்கு நின்றும் புறப்பட்டு மலைநாட்டுத்திருப்பதிகள் அனைத்தையும் மங்களாசாஸனம் செய்துகொண்டு, கையமர்சக்கரத்தென் கனிவாய்ப் பெருமானை செல்வப்பிள்ளை எம்மையன் இராமாநுசனென்று அருளப்பாடிட்டழைக்க, ஸ்ரீஸ்வாமியும் ப்ரேமபரவசராய், ஸம்பத்குமாரனையும் திருநாரணனையும் மங்களாசாஸனம் செய்துகொண்டு, க்ரமத்திலே, சக்ரவர்த்தித்திருமகனார் இஷ்டஸுஹ்ருல்லாபத்தாலே ஹ்ருஷ்டராய்ப்போந்து தரித்திருந்த கிஷ்கிந்தை மால்யவான் மலைகளுக்கு எழுந்தருளி, அங்கு பெருமாள் எழுந்தருளியிருந்தவிடங்களையெல்லாம் பரமப்ரேமத்தோடேஸேவித்துக்கொண்டு பாக்யநகரம் (ஹைதராபாத்) மார்க்கமாய் (நாஸிக்) பஞ்சவடிக்குஎழுந்தருளி "ஜலராமண்யகம்யத்ர-ஸ்தலராமண்யகம்ததா" என்று சொல்லியபடி நீரும் நிழலுமான வாய்ப்பை உடைத்தாய் சக்கரவர்த்தித்திருமகனும் பிராட்டியுமாக "அஸ்மிந்மயாஸார்த்தம்" இத்யாதிப்படியே கோதாவரீநதீதத்தீரங்களில் அமர்யாதமாகக்ரீடாரஸமனுபவித்துக்கொண்டு சிரகாலம் உகந்து எழுந்தருளியிருந்த அந்த திவ்யதேசத்தில் பல்லாயிரக்கணக்கானயோகிகள் நடுவே யோகீந்த்ரரான ஸ்ரீஸ்வாமி அத்தேசமனைத்தையும் "சோபயந்தண்டகாரண்யம்" என்னாப்போலே விளங்கச்செய்துகொண்டு சிலநாள்எழுந்தருளியிருக்கச் செய்தே ஸ்ரீஸ்வாமியினுடைய வைபவாதிசயங்களைகண்களாலும் செவிகளாலும் பருகினவநேகர் ஸ்ரீஸ்வாமிஸன்னிதிக்கு வந்து, பம்பாய் முதலானவிடங்களுக்கு எழுந்தருளி அங்குள்ளாரும் உஜ்ஜீவிக்கும்படி க்ருபைசெய்தருளவேணுமென்று தண்டகாரண்ய வாஸிகளானரிஷிகளைப்போலேப்ரார்த்திக்க ஸ்ரீஸ்வாமியும்

"உபஸ்த்தேயைருபஸ்த்தித:" என்றுப்போலே அந்தத்தன் பேராகவே நினைத்து, அங்கிகரித்தருளி அங்கு நின்றும் புறப்பட்டு பம்பாய்க்கு எழுந்தருளி அங்கு நகரத்திற்கு ஸமீபத்தில் காட்கோபர் என்றவிடத்தில் எழுந்தருளியிருந்து க்ரமப்ராப்தமான சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை அங்குள்ளார்களுடைய ப்ரார்த்தனானுகுணமாக அவ்விடத்திலேயே முடித்துக்கொண்டு, இந்தூர், உஜ்ஜயினீ, ரத்னா, தேவாஸ் முதலியஸம்ஸ்தானங்களில் அவற்றின் அதிபதிகளால் மஹத்தான உத்ஸாகத்துடன் அதீவ ஸத்கரிக்கப்பட்டவராய் புஷ்கரம் எழுந்தருளி அங்கு ஸர்வேசுவரன் ஜலரூபியாக வெழுந்தருளியிருக்கும் தடாகத்தில் நீராடி, பரதபூருக்குஎழுந்தருளி அவ்விடத்தில் ஸ்ரீஸ்வாமியின்கல்யாண குணங்களுக்குப்பரவசனான அரசனால் சகல விதத்தாலும் உபசரிக்கப்பட்டவராய், அங்குள்ளாரை ஸமாச்ரயணாதிகளாலே உஜ்ஜீவிக்கச்செய்து "ப்ருந்தாவனம் பகவதா" இத்தியாதிப்படி "சுபேநமனஸாத்யாத" மான ஸ்ரீப்ருந்தாவனத்திற்கு எழுந்தருளினார்.

அங்கு கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆண்டாளையும் ரெங்கமன்னாரையும் மங்களாசாஸநம் செய்தருளி கண்ணன் கழலிணைகளால் அலங்கரிக்கப்பட்ட "மதுராநாமநகரீ" என்று ப்ரஸித்தமான வடமதுரை,கோகுலம்,பாண்டிவடம், பக்தவிலோசனம், கோவர்த்தனம் முதலானவிடங்களில், அன்னாள் கண்ணனுடனனுபவிக்கப்பெறாத குறை எல்லாம் தீரும்படி அடியார்கள் குழாங்களுடன் பாவநாப்ரகர்ஷத்தாலே "ஆஹ்லாத சீதநேத்ராம்பு: புலகீக்ருதகாத்ரவாந் | ஸதாபரகுணாவிஷ்ட: த்ரஷ்டவ்ய: ஸர்வதேஹிபி:||" என்கிறபடியே தமது பரமபக்தியை ப்ரகாசித்துக்கொண்டு தமது ஸ்ரீபாதங்களால் அத்திவ்ய தேசங்களை வலம் வந்து "வேங்கடத்தைப்பதியாக வாழ்வீர்காள்" என்கிறபடியே திவ்யதேச வாஸத்தையே வாழ்ச்சியாகத்திருவுள்ளம் உகந்த ஸ்ரீஸ்வாமியும் அங்கு நின்றும் புறப்பட்டு ஹரித்வாரம், ருஷீகேசம், கண்டமென்னும் கடிநகர், ஸ்ரீநகர் முதலான திவ்ய க்ஷேத்திரங்களின் மார்க்கமாக எழுந்தருளா நின்றுகொண்டு ஆங்காங்குள்ள அலகநந்தை, பாகீரதி, நந்தப்ரயாகை முதலான புண்யநதிகளையும் அவகாஹித்து, வானவர் வணங்கும்

கங்கையின்கரைமேல் வதரியாச்சிராமம்'' என்றபதரிகாச்ரமத்தை அடைந்தார்.

அங்கு நரனுக்கு நாராயணன் அன்னாள் திருமந்திரோபதேசம் பண்ணின வைபவத்தை இன்னாளுமடியார்களனுபவிக்கும்படி நரோத்தமர்களுக்குத் திருமந்திரார்த்தங்களை விசததமமாக உபன்யஸித்தருளி ஆறங்கம்கூறினவாழ்வாருடைய திருமொழி திவ்யப்ரபந்தத்தை அவன் ஸன்னிதியில் பேரோலக்கமாகவிருந்து நித்யஸூரிகள்ஸாமகானம் பண்ணுமாப்போலே பத்துநாளாக அவன் திருச்செவி படுத்தியருளி அன்னாராயணாச்ரமத்தின் பரிசுத்தியைத் திருவுள்ளம் பற்றி, அங்கே சிலகாலம் பகவத்குணானுபவம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்க விரும்பின போதிலும், ஆங்காங்கு கண்ணாரக்கண்டு களிக்க வெண்ணிக்கதாகதாவென்று காமுறுகின்றவடியார்கள்படும் துயரைக் களைவதையே தலையாகக்கொண்ட வள்ளலான ஸ்ரீ ஸ்வாமி அதிக விலம்பமின்னிக்கே அங்கு நின்றும் புறப்பட்டு ராமநகரம் மார்க்கமாய் கௌசிகீநதியில்நீராடி நைமிசாரணியம் எழுந்தருளி அங்கு வனரூபியான ஸர்வேச்வரனைத் தமது திருவடித் தாமரைகளாலே வலம் வந்து அங்கு நித்யவாஸம் பண்ணுகின்ற யோகிச்ரேஷ்டர்களால் வணங்கப்பெற்றவராய் லக்ஷ்மணபுரி ( லக்னோ ) கர்ணபுரம் ( கான்பூர் ) மார்க்கமாய் "ஸூபக: சித்ரகூடோஸௌ'' என்று படைவீட்டிலும் பாக்யமுடையதாக பரதனும்கொண்டாடின சித்ரகூடபர்வதத்திற்குஎழுந்தருளினார்.

அங்கு " ஜனகதனயாஸ்நாநபுண்யோதகேஷு " என்று பிராட்டியும் பெருமாளுமாக நீராடும் பாக்யத்தைப்பெற்ற மந்தாகினீநதியில் நீராடி, அங்கு சில நாள் எழுந்தருளியிருந்து ரீவா ஸம்ஸ்தானத்திற்கு அத்தேசத்தரசர்ப்ரார்த்தனைக்கிணங்கி எழுந்தருளி அவ்வரசர் ஸ்ரீஸ்வாமியினுடையகுணபூர்த்தியையும் பாண்டித்யாதிகளையும் கண்டு பரவசராய் தங்கத்திருப்பல்லக்கில் ஸ்ரீஸ்வாமியைத்தோளிட்டெழுந்தருளப்பண்ணி விசேஷமாக ஆபரணங்களாலும் புஷ்பார்ச்சனைகளாலும்பீதாம்பரங்களாலும் தனங்களாலும் ஸத்கரித்து, ஸர்வாலங்காரபூஷிதமாய் ஸ்வர்ண ரஜதகசிதமான அம்பாரியுடன் கூடின கஜேந்திரம் ஒன்றையும்

உபாயனமாக ஸமர்ப்பிக்க, ஸ்ரீஸ்வாமியும் பகவத்கைங்கர்யத்திற்கு உருப்பாக அவைகளை அங்கீகரித்து வைஷ்ணவோத்தமரான அவ்வரசருக்கு யுக்தி பூர்வகம் ப்ரமாணபுரஸ்ஸரமாக ஸ்ரீராமாநுஜஸிந்தாந்தார்த்தங்களை உபதேசித்து அவ்வரசனை க்ருதார்த்தனைச்செய்து அங்குநின்றும் புறப்பட்டு க்ரமேண ப்ரயாகை (அலஹாபாத்) க்கு எழுந்தருளி அங்கு த்ரிவேணியில் நீராடி அடைவே வாராணஸீ (காசி) க்ஷேத்திரத்திற்கு எழுந்தருளி தர்சனஸ்தாபனம் பண்ணியருளி திருவயோத்திக்கு எழுந்தருளினர்.

அங்கு சக்ரவர்த்தித்திருமகனார் அவதரித்தருளின ஜன்மஸ்தானம், அவனும் பிராட்டியுமாய் எழுந்தருளியிருந்த கனகபவனம் முதலான ஸன்னிவேசங்களைக் கண்களாரக்கண்டு களித்து மிதிலை (ஜனகபுரம்) யை ஸேவித்துக்கொண்டு ஹத்வா ஸம்ஸ்தானத்திற்கெழுந்தருளி அங்கு அவ்வரசரால் ஸர்வ ப்ரகாரத்தாலும் பூஜிக்கப்பட்டவராய் அதன் ஸமீபத்திலுள்ள கண்டகீநதியில் ஸாளக்கிராமதீர்த்தத்தில் நீராடி ஆங்காங்குள்ள சேதனர்களை உஜ்ஜீவிக்கச்செய்துகொண்டு எழுந்தருளாநிற்கச் செய்தே அத்தேசத்திலுள்ள அநேகம் சதுஸ்ஸம்ப்ரதாய ஆசார்யர்களாலும் அநேகம் ராஜ ராஜாக்களாலும் சிரஸாப்ரார்த்திக்கப்பட்டு, பாடலீபுரம் (பாட்னு) எழுந்தருளி அவ்விடத்தில் தத்ஸமயம் நடந்திருந்த சதுஸ்ஸம்ப்ரதாய மஹாஸபையில் நாநாதேசங்களிலிருந்தும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான மஹாவித்வான்களாலும் ஹத்வாமஹாராஜா, காசிமஹாராஜா முதலான பல மஹாராஜாக்களாலும் வந்தித சரணநளிநயுகளராய் எல்லாருடையவும் ப்ரார்த்தனையையனுஸரித்து அக்ராஸனாதிபத்யத்தை அங்கீகரித்தருளி ஹிந்தி பாஷையில் அதி விசதமாக ச்ருதிஸ்ம்ருதிகளின் விசேஷார்த்தங்களை உபந்யஸித்தருளி தமது மதுரமான வாகம்ருதபரீவாஹத்தினால் ஸபையிலுள்ளார் அனைவரையும் ஸரஸஹ்ருதயர்களாகவாக்கி பரவசர்களாகும்படி செய்தருளினர்.

பின்பு அத்தேசத்திலுள்ள வநேகம் ராஜராஜாக்களும் ப்ரபுக்களும் ஸ்ரீஸ்வாமியினுடைய திருக்கல்யாண குணங்களிலீடுபட்டுப் பரமபக்தியுடன் தங்கள் தங்கள் ஸ்தானங்களுக்கு

எழுந்தருளப்பண்ணி, அவர்களால் விசேஷமாக ஸத்கரிக்கப்பட்டவராய் ராணிகஞ்சம்மார்க்கமாக ஸ்ரீ ஜகன்னாதமெழுந்தருளி அங்கு புருஷோத்தமனை மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு பொப்பிலி, விஜயநகரம், பித்தாபுரம் முதலான ஸம்ஸ்தானத்தரசர்களால் தங்கள் தங்கள் ஸம்ஸ்தானங்களுக்கெழுந்தருளப்பண்ணி ஸர்வவித உபசாரத்தாலும் பூஜிக்கப்பட்டவராய்க்கொண்டு, ஸ்ரீகூர்மம், ஸிம்மாசலம் முதலிய திவ்ய தேசங்களில் பெரும்பேறுபெற்று, காக்கினடா மார்க்கமாய் அடைவே திருமலை ஏற வெழுந்தருளினார்.

அங்கு திருவேங்கடமுடையானும் தேசாந்தரகதனான புத்ரன்பக்கலில் பித்ருஹ்ருதயம் கிடக்குமாப்போலிருந்த தமது மனோரதத்திற்குப்போக்குவீடாக கோவில் பரிகரமனைத்துக்கொத்தையும் அர்ச்சகமுகேந நியமித்தருளி தம் ஸன்னதியிலிருந்து அரிவாணம் ஸ்ரீசடகோபன் முதலிய மரியாதை புரஸ்ஸரமாக ஸ்ரீஸ்வாமியை அழைத்துவரும்படி செய்தருள, ஸ்ரீஸ்வாமியும் ஸ்ரீபெரியஜீயர்மடத்தேறவெழுந்தருளி, அவரால் வெகுவாக ஸத்கரிக்கப்பட்டு ஸகல பரிவாரங்களுடன் ஸன்னிதிக்கு எழுந்தருளி அங்கு திருவேங்கடமுடையான் திருவடிகளில் அலர்மேல் மங்கை புருஷகாரமாகச் சரணம்புக்கு அவனுடைய திருமேனி ஸௌந்தர்யாதிகளைக் கண்ணாரக்கண்டு களித்து அவனால் ஸாதரமாகப்ரஸாதிக்கப் பட்ட பரிவட்டம் ஸ்ரீ பாதரேணு முதலியமஹாப்ரஸாதங்களை சிரஸாஸ்வீகரித்துப்ரதக்ஷிணமாக எழுந்தருளி எம்பெருமானாரையும் ஸேவித்துக்கொண்டு ஸ்ரீ வராகநைநாரையும் மங்களாசாஸனம் செய்து, திருவெங்கடமுடையானுக்கு அந்தரங்கரும் பகவத் பாகவதகைங்கர்ய நிரதரும் ஸ்தானாதிபதியுமான மஹந்துவினால் பலவிதமாக உபசரிக்கப்பட்டவராய் இரண்டுமூன்றுநாள் அவ்விடம்எழுந்தருளியிருக்கச் செய்தே, இதுஸமயம் தான் பிறந்த விடமாகிய திருமலைக்கு ஸ்ரீ வரமங்கைத்தாயார் எழுந்தருளி இந்தப் பூப்ரதக்ஷிணயாத்திரையால் நமது மனோரதம் ஸங்கல்பித்தபடி பூர்ணமாயிற்று, இனித்வரையாக நம்ஸன்னிதிக்குவரவேணுமென்றுநியமித்ததை யோகமுகத்தாலறிந்த ஸ்ரீஸ்வாமி உடனே அங்குநின்றும் விடைபெற்றுக்கொண்டுபெரும்பூதூர்மாமுனியைத்திருவடித்தொழுது

தாயார் நியமனத்தை அனுஸரித்து அதிவேகமாகத் திருவரங்கம் பெரியகோயிலேற வெழுந்தருளினார்.

அங்கு ஸ்ரீ ஸ்வாமியினுடைய திருவடித் தாமரைகளை "என்றுகொலோ கண்குளிரக் காணும்நாள்" என்று ப்ரதீக்ஷித்துக்கொண்டிருந்த அரையர் உத்தம நம்பி முதலானோர் எதிர்கொண்டு சென்று ஸ்ரீ ஸ்வாமி திருவடிகளைக் கண்களாரக்கண்டு வாயாரப்புகழ்ந்து ஹ்ருஷ்டர்களாயழைக்க, ஸ்ரீஸ்வாமியும் குளிர்ந்த கடாக்ஷங்களாலும் வாகம்ருதவர்ஷங்களாலும் அவர்கள் ஆர்த்தியனைத்தையும் போக்கியருளிமடத்திலே யெழுந்தருளித் "திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னிதிரைக்கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும் கருமணியைக் கோமளத்தைக்" கண்களாரக் காணுகைக்கும் அரவணையமரும் அரங்கனுடைய அலையெறிகின்ற கடாக்ஷாம்ருதநதீவேகத்தால் அலமருகின்ற வடியார்களுக்கு ஆலம்பனமாகத்தமர்களில் தலைவரான தம்மால் பரிஷ்க்ருதமான மணத்தூணேபற்றிநின்று மாயோனை வாயார வாழ்த்துகைக்கும் மனோரதித்துக் கொண்டிருக்கச் செய்தே பெரியபெருமாளும் பெரியதிருநாளையிட்டுப்பெருகும் அடியாரைக் காணப் பேரவாக்கொண்டவராகையாலே பெரியார்களில் தலைவரான ஸ்ரீ ஸ்வாமியினுடைய ஆகமனத்தைப் பெறுப்பேறாக நினைத்துத் தமது குற்றேவல் செய்வார்களைக் கொண்டு அரிவாணம் முதலான ப்ரஸாதபுரஸ்ஸரமாக "போதரே என்று சொல்லி புந்தியில்ப்புகுந்து தன்பால் ஆதரம் பெருகவைத்து" ஸ்ரீஸ்வாமியைக் கோயிலுக்கு எழுந்தருளச்செய்து அந்தந்தஸ்தலங்களில் ஸ்ரீசடகோபாதிகளையும்ப்ரஸாதித்தருள ஸ்ரீ ஸ்வாமியும் போரவித்தராய் "தேவீகோதா" இத்யாதிப்படி மங்களாசாஸநக்ரமத்தில் பெரியபெருமாள் பெரியபிராட்டியார் முதலானோரை அமலனாதிபிரானில்ப்படியே ஆபாதசூடம் மங்களாசாஸநம்செய்தருளி அவ்வவர்கள்க்ருபாபரீவாஹமான திருமாலை பரிவட்டம் ஸ்ரீசடகோபன் முதலான ப்ரஸாதங்களை ஸாதரமாகத்தலைமேல்ப்புனைந்து மணவாளமாமுனிவன் "பொன்னடியாம் செங்கமலப்போதுகளை உன்னிச்சிரத்தாலே தீண்டி" மடத்தேறவெழுந்தருளிஆச்ரிதர்களுக்குஸமாச்ரயணாதிகளைப்ரஸாதித்துத்ததீயாராதனங்களைப் பாலாறாக நெய்யாறாக

நடப்பித்துக்கொண்டு அங்கு இரண்டு மூன்று நாள் எழுந்தருளியிருந்து அரங்கனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அவனடியார்களுக்குப் பீதாம்பராதிஸன்மானங்களைப்ரஸாதித்து அங்கு நின்றும் மாலிருஞ்சோலைக்கு எழுந்தருளி ஆண்டாளுடைய மனோரதத்தை அனுஷ்டான பர்யந்தமாக்கின எம்பெருமானுரைப்போலே யதிவரபுனரவதாரமான ஸ்ரீஸ்வாமியும் இன்றுள்ளாரனைவரும் காணும்படி "நாறு நறும்பொழில்மாலிருஞ்சோலை நம்பிக்கு நூறு தடாநிறைந்த அக்காரவடிசில்" ஸமர்ப்பித்தருளி இது விஷயத்தை நாச்சியார் ஸன்னிதியில் விண்ணப்பிக்கவேணுமென்று அதித்வரையாக நாச்சியார் திருமாளிகைக்கு (ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு) எழுந்தருளினர்.

இது ஸமாசாரத்தை யறிந்தவளான ஆண்டாளும் பரிவுடன் பர்வதஸத்ருசமான திருத்தேர் அமைத்தருளின ஸ்ரீபெரிய பட்டர்பிரான் ஸ்வாமி விஷயத்தில் பித்ருத்வ ப்ரதிபத்திபண்ணினமையை ப்ரகாசிப்பிக்கைக்காக ஆசார்ய புருஷாள் அனைவருடையவும் கோவில்ப்பரிகரமனைத்தினுடையவும திருவுள்ளத்தில புகுந்து தமது ஸர்வகோஷ்டியிலும ஸ்ரீஸ்வாமியை ப்ரதமஸ்தானத்திலெழுந்தருளியிருக்கச்செய்து, ப்ரதம தீர்த்தம் பரிவட்டம மாலைமுதலிய ஸகல மரியாதைகளையும் பஹுதினம் ஸாதிக்கச் செய்தருளி இப்படியே ஆசந்திரார்க்கம் நடக்கவேணுமென்ற திருவுள்ளத்துடன் ஒரு சாஸனமும் எழுதுவித்தாள். அதில் தங்களது உகப்பைத் தோற்றுவிக்கைக்காக ஸகல ஆசார்ய புருஷர்களும் கோயில் ப்ரதான பரிகரங்களும் திருவெழுத்திட்டு ஆண்டாள் திருமுன்பே ஸமர்ப்பிக்க, அவளுமதை அர்ச்சகமுகேந ஸ்ரீஸ்வாமிக்கு ப்ரஸாதித்தருளி ஸன்னிதியிலும் ஒரு ப்ரதியிருக்கச்செய்து அப்படியே என்றும் நடந்துகொண்டு வரச்செய்ததுடன் ஸ்ரீ ஸ்வாமி விஷயத்தில் தான் ஸஹோதரத்வ ப்ரதிபத்திபண்ணுகைக்கு அடியான அநேக ஹேதுக்களும் உண்டாயிற்று.

அவையாவன: இவளும் பட்டர்பிரான் கோதையாய் ஸ்ரீ ஸ்வாமியும் பட்டர்பிரான் ஞானஸந்ததியாய் ஆண்டாளு

டைய மனோரதத்தை அனுஷ்டான பர்யந்தமாக்கியதும் அவளுடைய ப்ரதிஷ்டாததீயாராதனத்தைப் பெருக்க நடத்தியதும் அநர்க்கமான அநேக பீதாம்பரங்களை ஸமர்ப்பித்தும் போந்தவை. இவளுடைய மனோரதபூரகராகையாலேயன்றோ நம்மிராமாநுஜனுக்குக்கோயிலண்ணன் என்று திருநாமம் உண்டாயிற்று. இந்தப்ரகார மநேகவிதமான ஸம்பந்த விசேஷத்தால் ஸ்ரீ ஸ்வாமியை ஸமஸ்த்தமரியாதைகளாலும் புரஸ்கரித்தருள, ஸ்ரீ ஸ்வாமியும் தமது விஷயத்தில் ஆண்டாளுக்குண்டான க்ருபாபரீவாஹத்தைக்கண்டு போரவித்தராய் இராநிற்கச்செய்தே, ஆண்டாளும் வரமங்கையும் ஏககண்டைகள் ஆகையாலே அவளும் ஸ்ரீவரமங்கைத்தாயார் திருவுள்ளத்தை யனுஸரித்து ஸ்ரீ ஸ்வாமிக்கு விடைகொடுத்தருள ஸ்ரீ ஸ்வாமியும் வானமாமலையை நோக்கி எழுந்தருளாநிற்கச்செய்தே, மத்யேமார்க்கம் தாபார்த்தர்கள் தண்டாமரைக் கயத்தைநோக்கி வருமாப்போலே அஹமஹமிகையா வருகின்றவர்களாயும் ஸ்ரீஸ்வாமி திருவடிகளைச்சில காலம் ஸேவிக்கப்பெறாமையால் ஆர்த்தர்களாயுமிருக்கின்ற அடியார் குழாங்களது விடாயனைத்தையும் தமதுகுளிர்ந்த கடாக்ஷங்களாலும் ஸாதரஸ்ரீஸூக்திகளாலும் ஆற்றிக்கொண்டு ஸ்ரீவரமங்கலநகர் ஏறவெழுந்தருளினார்.

அங்கு முதலில் சேற்றுத்தாமரையிலே நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டதும் ஸ்ரீ ஸ்வாமியுடைய சிரகால (ஐந்து வருஷங்களுக்கதிகமான) விச்லேஷத்தை ஒருபகலாயிரமூழியாகக் கழித்துப் பெருவிடாயரான பதினெண்புவி ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய 'சிரீவரமங்கலத்தவர்' வாடின ஸஸ்யத்துக்கு அம்ருதவர்ஷம்போன்ற ஸ்ரீ ஸ்வாமியின் ஸமாகமத்தாலுண்டான ஹர்ஷப்ரகர்ஷத்தாலே வானமளாவும்படியான வேதகோஷத்துடன் பூர்ணகும்பஹஸ்தர்களாய் வந்து தண்டம் ஸமர்ப்பித்துத் தத்காலோசிதமான பல வார்த்தைகளாலே தங்களது பாக்யத்தை விண்ணப்பிக்க ஸ்ரீ ஸ்வாமியும் ப்ரேமபூர்வகாலாபங்களாலேஅவர்களை யதோசிதம்ஸமாதானித்துக்கொண்டு தாயார் ஸேவையில் செல்லுகின்ற சிந்தனையுடன் எழுந்தருளாநிற்கச்செய்தே ஸ்ரீவரமங்கைத்தாயாரும் ஸ்ரீஸ்வாமிவிஷயத்தில் தமக்கு உண்டான பித்ருத்வப்ரதிபத்தி தோன்ற அரிவாணம் முதலிய

ப்ரஸாதத்வாரா மங்களவாத்ய கோஷங்களுடன் ஸ்வாகதம் செய்தருள, ஸ்ரீ ஸ்வாமியும் அந்த ப்ரஸாதங்களை முடிமேல்சூடி அடியார்கள் புடைசூழ மடத்திற்கு எழுந்தருளிக்கோப்புடைய சீரிய சிங்காதனத்தில் ஏறி வீற்றிருந்தார்.

அனந்தரம் தாம் ஸ்ரீவரமங்கைக்கும் தேவநாயகனுக்கும் உரியனவாக ஆதரித்துக்கொணர்ந்த ஆபரணம் பீதாம்பரம் முதலான உபஹாரங்களுடன் மங்கையை மணாளனுடன் மங்களாசாஸனம் செய்தருளி அவர்களால் மகிழ்வுடன் ப்ரஸாதிக்கப்பட்ட மரியாதைகளனைத்தையும் ஸாதரமாக ஸ்வீகரித்துக்கொண்டு மங்களாசாஸனக்ரமத்தில் அரங்க நகரப்பனை அடிபணிந்து அடியார்கள் அனைவரையும் ஸ்ரீபாத தீர்த்தம், ததீயாராதனம், புரப்ரவேசம் முதலியவற்றால் மகிழ்வுறச்செய்து வாழ்வித்தருளினர்.

இந்தப்பூப்ரதக்ஷிணபாத்திரையில் ரீவா, இந்தூர், ஹத்வாமுதலிய மஹாராஜாக்களுடைய ஸம்ஸ்தானங்களில் ஸ்ரீஸ்வாமியினுடைய ஞானவைராக்யாதி கல்யாண குணங்களில் ஈடுபட்டு "குணைர்தாஸ்யமுபாகதர்"களான அரசர்களால் பஹுவிதமாக ஸத்கரிக்கப்பட்டதும் பம்பாய், பாட்னு, கான்பூர், ஹைதராபாத் முதலிய நகரங்களில் நடைபெற்ற பட்டணப்பிரவேசம் முதலான மஹோத்ஸவங்களும் அவ்வவ்விடங்களில் எண்கடந்த சேதனர்கள் ஸ்ரீ ஸ்வாமியினுடைய கல்யாண குணங்களுக்குப் பரவசர்களாய் ஆட்பட்டதும் பேச்சுக்கு நிலமில்லாமையாலே விஸ்தரிக்கப்படவில்லை.

அனந்தரம் வானமாமலையில் வரமங்கைநாயகனும் அரங்கநகரப்பனும் மனம் மகிழும்படி நித்ய உத்ஸவம் முதலியவைகளை உத்தரோத்தரம் பெருக்கி நடத்திக்கொண்டு எழுந்தருளியிருந்து தாம் யாத்திரையில் எழுந்தருளியிருந்தபோது மாறனடி பணியாத மனக்குறை எல்லாம்தீரப் பலதடவை வைசாகோத்ஸவத்தைவ்யாஜீகரித்துத் திருநகரிக்கு எழுந்தருளி ப்ரணவம்போல் உபயப்ராதான்யம் ப்ரகாசிக்கும் கோவிலில் ஆதிப்பிரானையும் ஆழ்வாரையும் அடிதொழுது அவர்களால் ப்ரேம

பாரவச்யத்தால் ப்ரஸாதிக்கப்பட்ட ப்ரதம தீர்த்தம் முதலிய ஸகல மரியாதைகளையும் ப்ரதமோத்ஸவம் முதல்கொண்டு பத்து உத்ஸவங்களிலும் ஸாதரமாகப்பெற்றுக்கொண்டு இரண்டொருமாஸம் ஆழ்வார்ஆதிப்பிரான்து ஸர்வ கோஷ்டிகளையு மலங்கரித்துக்கொண்டு பகவத் விஷயாதிகளையும் ப்ரஸாதித்துக் கொண்டு அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தார்.

திரும்ப வானமாமலைக்கு எழுந்தருளி தத்ஸமயம் உபய வேதாந்தபுபுத்ஸுக்களான ஆச்ரிதர்கள் அநேகருக்கு உபய வேதாந்தங்களையும் விசததமமாக ப்ரஸாதித்துக்கொண்டும் உபயநாச்சிமார் ப்ரதிஷ்டைமுதலிய சில உத்ஸவங்களையும் ஆஸ்தானத்துக்கு எழுந்தருளினதுமுதல் அவிச்சேதேனப்ரதம ஸ்வாமி உத்ஸவத்தில் நடைபெற்றுவந்த ஸ்ரீராமநுஜஸித்தாந்த ஸம்ப்ரதாயாபிவர்த்தனீ ஸபையை சதுச்சாஸ்த்ரபாரங்கதர்களான வித்வான்களைக்கூட்டி வெகு வைபவத்துடன் ப்ரதிஸம்வத்ஸரம் நடப்பித்துக்கொண்டும் பத்து ஸம்வத்ஸரம் இப்படி வானமாமலையிலெழுந்தருளியிருந்தார்.

இந்த ஸமயத்தில் ஊத்துமலை ஸ்தானத்தை (ஜமீனை)ச் சேர்ந்த வீரகேரளம்புதூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நவநீத க்ருஷ்ணனுக்கு நடத்தப்படவிருக்கும் ஸ்வர்ணத்வஜஸ்தம்ப ப்ரதிஷ்டாமகோத்ஸவத்தை ஸ்ரீ ஸ்வாமி யெழுந்தருளி நடத்தித்தர வேணுமென்று அவ்விடத்து ப்ரதானை (ஜமீன்தாரிணி) யாலே ப்ரார்த்திக்கப்பட்டு ஸகல பரிவாரங்களுடனும் எழுந்தருளி அங்கே ஐந்துநாள்வரை கோஷ்டி முதலானவற்றை நிர்வஹித்துப்பரமோத்ஸாஹத்துடனே ப்ரதிஷ்டா மகோத்ஸவத்தை நிறைவேற்றி,தக்ஷிணைகளுக்கென்று ஸமர்ப்பிக்கப்பெற்ற பெரும் த்ரவ்யத்தைத் தமது திருக்கரங்களாலேயே யதோசிதம்விநியோகித்து வந்திருந்தவர்களை அநுக்ரஹித்ததும், ஸ்ரீ ஸ்வாமியைத் தமது அரண்மனைக்கு எழுந்தருளுவித்து ரங்க விலாஸத்தில் சிங்காதனமிட்டு ஸ்வர்ணருப்யாதிகளாலே திருவடிகளை அர்ச்சித்து வானமாமலை ஸந்நிதியோடொக்க இவ்விடம் ஸந்நிதியையும் யதாபூர்வமாக ஸ்ரீஸ்வாமி அபிமானித்தருளவேணுமென்றும் அரங்கநகரப்பனது நித்யப்படித்திரத்துக்குத் தமது

த்ரவ்யத்தை விநியோகித்தருளவேணுமென்றும் ப்ரார்த்தித்து அந்த ப்ரதானே (ஜமீன்தாரிணி) ஸகலோபசாரங்களுடனும் ஸ்ரீ ஸ்வாமியைத் திரும்ப எழுந்தருளுவித்ததும் ஒரு முக்ய விசேஷமாகும்.

அநந்தரம் ஸ்ரீ ஸ்வாமி திருவடிகளைக் கண்களாரக் கண்டு களித்தவர்களும் திருக்கல்யாண குணாம்ருததாரைகளைச் செவிகளாலாரப்பருகினவர்களும் நேரில் வந்தும் விஞ்ஞாபனப் பத்ரிகைகள் மூலமாகவும் பலதடவைப்ராத்தித்ததன்பேரில்தாம் க்ருபாமாத்ரப்ரஸன்னாசார்யர்களில்த் தலைவராகையாலும் ப்ரார்த்தனாபத்ரிகைகள் பர்வதாகாரமாகக் குவிந்தபடியாலும் "ப்ரஸாதபராமளநாதேள" இத்யாதிப்படியே இதற்குமுன் தாம் எழுந்தருளாத ஜனபதங்கள், நகரங்கள், கிராமங்கள் முதலியவிடங்களுக்கும் எழுந்தருளி ஆங்காங்குள்ள ஆச்ரிதர்களை உஜ்ஜீவிக்கச் செய்தருளவேணுமென்று திருவுள்ளம்பற்றி வரமங்கை மணாளனிடத்தும் அரங்கநகரப்பனிடத்தும் விடைபெற்றுக்கொண்டு மூன்றும் தடவையாக விஜயயாத்ராப்ரஸ்தானத்தை உபக்ரமித்தருளினார்.

சோபனமான முகூர்த்தத்தில் ஸ்ரீமடத்தில்நின்றும் புறப்பட்டு நாச்சியார் திருமாளிகை (ஸ்ரீவில்லிபுத்தூர்) கூடல்(மதுரை) மாலிருஞ்சோலை மார்க்கமாய்த் திருப்புல்லாணிக்கெழுந்தருளித் தெய்வச்சிலையாரைத் திருவடி தொழுது " ஸேதும்த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய " என்கிறபடியே திருவணையை ஸேவித்துவிட்டு அங்குநின்றும் புறப்பட்டு நகரத்தார்களுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி தமது பாதரேணுவால் அத்தேசங்களைப்பாவனமாக்கி அங்குள்ள குபேரஸத்ருசர்களான தனிகர்களால் பஹுவாக ஸத்கரிக்கப்பட்டு, திருக்கோட்டியூர் திருமெய்யங்களை மங்களாசாஸனம் செய்துகொண்டு புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தில் ஸகல விருதுகளுடன் ஸர்வப்ரகாரத்தாலும் ஸத்கரிக்கப்பட்டவராய் ஆசார்ய சரணநளினங்களில் அதிப்ராவண்யமுடையவர்களான சேரன்குளவாஸிகளான சிஷ்யர்களால் சாதுர்மாஸ்யஸங்கல்ப்ப மஹோத்ஸவத்தை தங்கள் ஸ்ரீ கிராமத்தில் நடத்தியருளவேணுமென்று சிரஸாப்ரார்த்திக்கப்பட்டு அவர்களது

மநோரதபூர்த்தியைத் தன்பேறாக நினைத்து அவ்விடம் எழுந்தருளி ஸங்கல்பத்தை ப்ராரம்பித்து பரதாழ்வானுக்கும் பரிகரமனைத்திற்கும் பரத்வாஜ மஹரிஷியால் ஒருநாள் செய்யப்பட்டதனைய ததீயாராதனத்தை மாஸத்வயம் மஹாகுதூஹலத்துடன் மஹநீயர்களால் நடத்தப்பெற்று உத்தான மஹோத்ஸவத்தை அங்கேயே நடத்தியருளினார்.

அநந்தரம் அவ்விடமிருந்து புறப்பட்டு மன்னனாரை மங்களாசாஸனம் செய்துகொண்டு நந்திபுரவிண்ணகரம், நறையூர், குடந்தை, விண்ணகர், வெள்ளியங்குடிகளை மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு திருவாவடுதுறை, திருப்பனந்தாள் மடாதிபதிகளால் அதிச்ரத்தா பக்தியுடன் உபசரிக்கப்பட்டு உடையார் பாளயத்தேறச்சென்று அதற்கு உடையாராலும் உபசரிக்கப்பட்டவராய்க்கொண்டு, குருகைக்காவலப்பன் ஸன்னிதி மார்க்கமாக ஸ்ரீமுஷ்ணம் எழுந்தருளி ஞானப்பிரானடி வணங்கி வீரநாராயணபுரத்தேறவெழுந்தருளி நாதமுனி ஆளவந்தாரை முன்னிட்டு மன்னனார் மலரடிதொழுது புதுவை (புதுச்சேரி) நகர் எழுந்தருளி அவ்வரசாங்கத்தாரால் செய்யப்பெற்ற அளவிறந்த உபசாரங்களைப்பெற்றுக்கொண்டு திருக்கோவலூர் நாயனாரையும் முதலாழ்வார்களையும் முடியால் வணங்கி முன்னோர் நடந்த மார்க்கமாகத் திருமலைக்கெழுந்தருளி அலர்மேல்மங்கையையும் அவள் உறைமார்பனையும் அடிவணங்கி அகமகிழ்ந்து திருநீர்மலையில் நீர்வண்ணனை மனமுருகி மலரடி இறைஞ்சி மாடமாமயிலைத் திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளினார்.

அங்கு, பார்த்தஸாரதி பதமலர்பணிந்து அவனுடைய பாதபத்மச்சாயையில் பலமாஸம் எழுந்தருளியிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு பகவத் விஷயாதிகளையும் ஸமாச்ரயணாதிகளையும் ஸாதித்துக்கொண்டு மத்யே ஸ்ரீபெரும்பூதூருக்கு எழுந்தருளி எம்பெருமானார் இணையடி இறைஞ்சி மறுபடி திருவல்லிக்கேணி எழுந்தருளி, ப்ரதமஸ்வாமி மஹோத்ஸவத்தில் யதாபூர்வம்பண்டித ப்ரமுகர்களைக்கூட்டி உபய வேதாந்த உபந்யாஸங்களாலே ச்ரோதாக்களுடைய மனஸைக் கவர்ந்தருளி, அவ்வவர்களுக்குத்தக்கவாறு ஸன்மானங்களை ப்ரஸாதித்

தருளி, ததீயாராதனம் டோலா உத்ஸவம் முதலிய வைபவங்க ளாலே பகவத்பாகவதர்களை ஆராதித்து, சாதுர்மாஸ்யஸங்கல்ப மஹோத்ஸவத்தை ஆச்ரிதர்களுடைய ப்ரார்த்தனையை அனுச ரித்து அவ்விடத்திலேயே முடித்துக்கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டு, கூடூர், நெல்லூர் மார்க்கமாய் நூஜவீடு ஸம்ஸ்தானத் திற்கெழுந்தருளினர்.

அங்கு ஸ்ரீஸ்வாமி திருவடிகளில் ப்ராவண்யாதிசயத்தை உடையவர்களான ராஜாக்களால் இரண்டு மாஸகாலம் அத்யந் தம் உபசரிக்கப்பட்டவராய் அவர்களுக்கு விசேஷமாக ஸ்ரீராமா நுஜஸித்தாந்தத்தில் ப்ராவண்யம் வ்ருத்தியாகும்படி அதிவிசத மாகவும் யுக்தி யுக்தமாகவும் தெலுங்கு பாஷையில் அதிஸரள மாகக் காலக்ஷேபோபந்யாஸங்களை ஸாதித்து, அவர்களை உஜ்ஜீ விக்கச்செய்து, அங்குநின்றும் புறப்பட்டு ராஜமஹேந்த்ரம்வரை எழுந்தருளி, பாலக்கோல், நரஸாபுரம், பெஜவாடா மார்க்கமா கப் பாக்யநகரத் (ஹைதராபாத்) திற்கு எழுந்தருள, அங்கு நிஜாம் மன்னராலே விருதுகளாலும் பீதாம்பராதிகளாலும் ததீ யாராதன உபாயனங்களாலும் அதிவஸத்கரிக்கப்பட்டவராய் புரப்ரவேசம்செய்து ஸீதாராமபாக் என்ற வரதராஜன் ஸன்னி திக்கு எழுந்தருளலானர்.

பின்பு, அங்கு சாதுர்மாஸ்ய விரதத்தை ப்ராரம்பித்து ஸ்ரீகிருஷ்ணஸேட் என்ற மஹாதனிகராலே அநன்ய ஸாதாரண மாக இரண்டுமாஸம் ததீயாராதனம் முதலியவைகளை நடத்தப் பெற்று அங்குள்ள யாவரும் ஸ்ரீ ஸ்வாமியினுடைய பாண்டித்யா திகளையும் கல்யாணகுணங்களையும் கண்டு விஸ்மிதாந்தக்கரணர் களாய் வெகுவாக ஸத்கரிக்க ஸ்ரீ ஸ்வாமியும் அங்கு நின்றும் புறப்பட்டு சிர்ணபல்லி முதலான விடங்களில் ஜமீன்தார்க ளால் உபசரிக்கப்பட்டவராய் க்ரமேணநாந்தேடு எழுந்தருளி அங்கு சுத்த கோதாவரியைத்தம்முடைய ஸ்ரீபாதஸ்பர்சத்தால் பாவனமாக்கிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

இந்த ஸமயத்தில் நெடுநாளாக மழையே இல்லாமல் தபித்துக்கொண்டிருந்த அந்தத் தேசம் முழுவதும் ஸ்ரீ ஸ்வாமி

திருவடி ஸ்பர்சம் ஏற்பட்டதும் யுதேஷ்டமாக மழை வர்ஷிக்கப் பெற்று ஸுபிக்ஷமானதைக்கண்டு அங்குள்ளாரனைவரும் விஸ்மிதர்களாகி ஸ்ரீ ஸ்வாமியின் பிரபாவத்தைப் பலவாறுகப் புகழலானுர்கள். இப்படியிருக்கச்செய்தே; ஸிகந்தராபாத் நகரவாஸியாய் விம்சதிலக்ஷாதிபதியாய் ஸ்ரீ ஸ்வாமி திருவடி ஸம்பந்தியாய் தார்மிகோத்தமனுயிருக்கிற லக்ஷ்மீநாராயணச்ரேஷ்டியாலே தமது நூதன ஸன்னிதி ப்ரதிஷ்டாமஹோத்ஸவத்தை நடத்தித்தரவேணுமென்றுப்ரார்த்திக்கப்பட்டவராய் அவரது மனோரதத்தைப்பூர்த்தி பண்ணுவதாகத் திருவுள்ளம்பற்றி நாந்தேடுநின்றும் புறப்பட்டு லாத்தூர் மார்க்கமாய் பாக்யநகரத்திற்கடுத்த ஸகிந்தராபாத் மஹாநகரத்திற்கு எழுந்தருளலானுர்.

அங்கு அச்சமயம் அந்தச்ரேஷ்டியால் லக்ஷக்கணக்காகச் செலவு செய்து அமைக்கப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீநாராயணன்ஸன்னிதி மஹாப்ரதிஷ்டையை அதிக வைபவத்துடன் நடப்பித்தருளி தீர்த்தபரிக்ரஹமும் செய்தருளி அச்சிரேஷ்டியை அனுக்ரஹித்து, அவரால் ஆதராதிசயத்துடன் ஸமர்ப்பிக்கப்பட்ட பகுமானங்களையும் அந்த ஸன்னிதியினுடைய ஸகல வைதிகநிர்வாஹங்களையும் அவருடைய ப்ரார்த்தனைக்கிணங்கி அங்கீகரித்தருளி அங்கு சிலநாள் எழுந்தருளியிருந்து அவ்விடமிருந்து ப்ரஸ்திதராய்வனப்பருத்தி, ஆத்மகூர் ராஜாக்களுடைய ப்ரார்த்தனுநுகுணமாக முதலில் வனப்பருத்தி ஸம்ஸ்தானத்திற்கு எழுந்தருளித்தமது சாதுர்மாஸ்யஸங்கல்பமஹோத்ஸவத்தை அவ்விடத்திலேயே நடத்தியருளவேணுமென்று ஜமீன்தார்கள் ப்ரார்த்திக்க, அதன்படியே ஸ்ரீஸ்வாமியும் அவர்களுடைய மனோரதத்தைப் பூர்த்திசெய்தருள ஜமீன்தார்களும் ஸ்ரீ ஸ்வாமியினுடைய குணங்களில் ஈடுபட்டவர்களாய் ஸ்ரீ ஸ்வாமி எப்பொழுது எழுந்தருளினுலும் இம்மாதிரி மஹா வைபவத்துடன் இவ்விடம் ஸம்ஸ்தானத்திலிருந்து சாதுர்மாஸ்யமஹோத்ஸவம் சாச்வதமாக நடக்கும்படிக்கு சாஸனம் செய்துவைத்தார்கள்.

பின்பு, அங்கு கார்த்திகை மாஸத்தில் நடக்கின்ற மஹாவித்வத்ஸபையில் ஸ்ரீஸ்வாமி ஆத்யக்ஷ்யம் வகித்தருளி நாநாதேசங்களிலிருந்தும் வந்தவர்களான பல்லாயிரக்கணக்கான பண்டி-

தர்களுக்கும் பலவாறாக அவ்வவர்கள் யோக்யதைக்குத்தகுந்த படி பகுமானம்செய்து தம்முடைய கீர்வாணபாஷாமயமான உபந்யாஸாம்ருதங்களாலே ஸகல சேதனர்களையும் உஜ்ஜீவிக்கச் செய்து, அங்கு நின்றும் புறப்பட்டு ஆத்மகூர் ஏறவெழுந்தருளி அவ்விடத்தில் ஸ்ரீஸ்வாமியினுடைய அதிமாநுஷமான பாண்டித்யாதிகளிலும் கல்யாண குணங்களிலும் அத்யந்தம் ஈடுபட்டவரான ராஜாவால் வெகுகாலம் இங்கேயே எழுந்தருளியிருந்து காலக்ஷேபாதிகளாலே தங்களை உஜ்ஜீவிக்கச் செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கப்பட்டவராய் அங்கு கொஞ்சகாலம் எழுந்தருளியிருந்தார்.

அப்பொழுது ஸ்ரீஸ்வாமியை ஸேவிக்கவேணுமென்று பரம ஆர்த்தியுடன் கூடினவர்களான பெரிய பெரிய மஹான்களும் தனிகர்களும் பம்பாய் முதலான விடங்களில் நின்றும் புறப்பட்டு வந்து, உத்தரதேசங்களையும் பொன்னடிச்சாத்தவேணுமென்று திரள்திரளாக நேரிலும் விஞ்ஞாபனபத்ரிகாமூலமாகவும் ப்ரார்த்திக்க, அவர்களுடைய ப்ரபலப்ரார்த்தநாநுஸாரேண ஸ்ரீஸ்வாமியினுடைய திருவுள்ளம் வடதிசையை நோக்கும்பொழுது, ஸ்ரீவரமங்கைத்தாயாரும், அவளது கைங்கர்யத்தில் நியமிதர்களாய் அவள் ஸந்நிதியில் வர்த்தித்துப்போரும் அந்தரங்கர்கள் பலரும் ஸ்வப்னமுகத்தாலும் விஞ்ஞாபனப்பத்ரிகாமுகத்தாலும் தங்களுடைய விச்லேஷாஸஹிஷ்ணுதையைத்தெரிவிக்க ஸ்ரீஸ்வாமியும் அதற்கிரங்கி, ஸ்ரீதாயார் திருவுள்ளத்தையநுஸரித்து அங்குநின்றும் புறப்பட்டு பெங்களூர் எழுந்தருளி, அங்கு மைஸூர் ஸம்ஸ்தானத்தவர்களால் விசேஷமான விருது பகுமானங்களால் ஸத்கரிக்கப்பட்டவராய், அங்கு ஒருவாரம் எழுந்தருளியிருந்து, சேலம், நாமக்கல் மார்க்கமாய் அதித்வரையுடன் பெரியபெருமாளை யதாக்ரமம் யதாபூர்வமாக மங்களாசாஸனம் செய்தருளி விசேஷததீயாராதநாதி வைபவத்துடன் ஒன்பதுநாள்வரைத் திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளியிருந்து நாலு ஸம்வத்ஸரமாக வழிநடந்த மார்க்கத்தை இரண்டு மாஸத்தில் இலகுவாக நடந்து வானமாமலை ஏறவெழுந்தருளித்தமது திருக்கல்யாண குணங்களாலும் ஸ்ரீபாததீர்த்தத்தின் மகிமையாலும் தாபத்ரயதப்தர்களான தமர்களை ஒரு

சீதளகாளமேகம்போல அத்தர்பங்களில் நின்றும் விடுவித்தருளி வரமங்கை நாதனேயும் அரங்கநகரப்பனேயும் பல படிகளாலும் பரமானந்தபரிதர்களாகச்செய்துகொண்டு பலகாலம்பல்லாயிரம் அடியார்கள் திரள்நடுவே ஒரு சரத்பூர்ணிமாகாலத்துத்தாராதிபன்போல எழுந்தருளியிருந்தார்.

இப்படி எழுந்தருளியிருக்கும் ஸமயத்தில்தாம்சிரகாலம் மனோரதித்துப்போந்தபடி புஷ்பகவிமானம் போன்ற பசும்பொன்னிழைத்த ஒருபுண்யகோடி விமானத்தைக்கண்டோர் கண்களையும் மனஸையும் கவரும்படி பெருவனப்பு வாய்ந்ததாகச் செய்வித்து, அதில் ஆங்கீரஸ வருஷம் சைத்ரோத்ஸவம் மஞ்சநீர்த்திருநாளில் வரமங்கைச்செல்வியை மணாளனுடன் எழுந்தருளப்பண்ணி, "க்ருதக்ருத்யஸ்ததாராமோவிஜ்வர: ப்ரமுமோதஹ" இத்யாதிப்படியே திருவுள்ளம் உகந்தருளினர். பிறகு ஒரு ஸம்வத்ஸரம் வரமங்கைநாதனுக்கு நித்ய உத்ஸவாதிகளை உத்தரோத்தரம்பெருக நடத்திக்கொண்டு தாயார் மனம் மகிழும்படி அடுத்த பங்குனி உத்ஸவத்திலும் அந்த விமானத்தில் தாயாரையும் பெருமாளையும் எழுந்தருளச்செய்து புதிதாகப் பெரியதோர் பவன்மாலையும் தகடிபீதாம்பரங்களும், சாத்தியருளிக்கண்களாலாரப்பருகி, ஆனந்தபரிதரானர்.

அனந்தரம் அடுத்த ஸ்ரீமுக வருஷம் சைத்ரமாஸத்தில் வானமாமலையில் பெரியதோர் ஸநாதனதர்ம ஸபையை நடத்தவேணுமென்று திருவுள்ளம்பற்றி அதற்கு ஒருநாளும் குறிப்பிட்டுப் பலவிடங்களிலும் பத்ரிகை விடுத்திருக்கச்செய்தே மகரநெடுங்குழைக்காதன் மஹோத்ஸவத்திற்காகத் தென்திருப்பேரை திவ்யதேசத்திற்கு எழுந்தருளி அங்குள்ளார் அனைவரையும் ஆநந்திப்பிக்கவேணுமென்று அவ்வூரார்களால் அதீவப்rார்த்திக்கப்பட்டவராய் ஸ்ரீ ஸ்வாமி அதை ஒரு வ்யாஜமாகக்கொண்டு, அநேக நாளாக ஆழ்வாரடிபணியாத அகக்குறையெல்லாமகல இதுவொரு ஸமயமொருப்பட்டதே! என்று போரமகிழ்ந்து திருநகரியைநோக்கி ப்ரஸ்த்திதராகவிருக்கச்செய்தே அந்தரங்கர் சிலர் ஸநாதன தர்மமஹாஸங்கத்திற்காகக் குறிப்பிட்ட நாளில் இப்படி அசலிடத்திற்கு எழுந்தருளுவதே! இஃதென்ன

வென்று விண்ணப்பிக்க ஸ்ரீ ஸ்வாமியும் இது ஸமயம் தப்பினால் நமக்கு ஆழ்வாருடைய ஸேவை அரிதுகாண்: ஆகையாலிவ்விதம் ஸங்கல்பித்தோம் என்று நியமித்துத் திருநகரிக்கு எழுந்தருளினார்.

அங்கு ஆழ்வார் பரிகரங்கள் அனைவராலும் அரிவாணம் முதலிய ப்ரஸாதத்துடன் திருச்செங்கண்ணித்துறையில் எதிர்கொள்ளப்பட்டு ஸகலமான ஸன்னிதிவிருதுகளுடன் நேரே கோவிலுக்கு எழுந்தருளி, அங்கு ஸகல மரியாதைகளையும் ஆழ்வாரும் ஆதிப்பிரானும் ஸாதித்தருள, அத்தை ஆதராதிசயத்துடன் பெற்றுக்கொண்டு மடமேறவெழுந்தருளினார். மறுநாள் ஸ்ரீஸ்வாமியின் மனோரதத்திற்கேற்ப வாய்த்த திருவிசாகத் திருநக்ஷத்ரத்தில் திருமஞ்சனம் முதலிய ஸர்வகோஷ்டிகளிலும் ஆழ்வர்ருடைய ஸர்வவித ஸேவைகளையும் அநேகநாள் அனுபவியாத குறையெல்லாம் தீரும்படி அனுபவித்து மகிழ்மாறனும் அவனடியார்களும் மகிழ்வுடன் ப்ரஸாதித்தருளின ப்ரதமதீர்த்தம் பரிவட்டம் திருமாலை ப்ரஸாதம் முதலிய ஸகல மரியாதைகளையும் பரமானந்தத்துடன் பெற்றுக்கொண்டு அன்று ததீயாராதனத்தையும் பெரியதாக நடத்தியருளித் தென்திருப்பேரைக்கு எழுந்தருளினார்.

அங்கு மகர நெடுங்குழைக்காதன் மஹோத்ஸவத்தை அவப்ருதாந்தமாக நடப்பித்தருளி, திரும்ப வானமாமலைக்கு எழுந்தருள அபிமுகராகவிருக்கச்செய்தே, நித்யவிபூதி யனுபவத்தை இருள்தருமாஞாலமான இவ்விபூதியிலேயே ஸ்ரீஸ்வாமி விஷயத்தில் ப்ரகாசிப்பிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றின ஸ்ரீவைகுண்டநாதனும் தனது குற்றேவல் செய்வாரை அனுப்பிவித்து ஸ்ரீ ஸ்வாமியைத் தன்பதிக்கு எழுந்தருளச்செய்து, ஆழ்வாரையும் ஐந்தாம் உத்ஸவவ்யாஜத்தாலே அவ்விடம் எழுந்தருளச்செய்து ஆழ்வார் புருஷகாரமாக ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸர்வஸ்வதானம் பண்ணி ஸகல மரியாதைகளையும் ப்ரஸாதித்தருள, ஸ்ரீ ஸ்வாமியும் இதொருக்ருபா பரீவாஹமிருந்தபடியென் ! என்று போரவித்தராய் " அத்ரபரத்ரசாபி " இத்யாதிப்படியே தமது சரமபர்வநிஷ்டை தோன்றத் திருநகரியேற வெழுந்தருளி ஆழ்வா

ரைத் திருவடித்தொழுது மஹாவைபவத்துடன் வானமாமலைக்கு எழுந்தருளினர்.

அங்கு "தர்மஸம்ஸ்தாபனார்த்தாயஸம் பவாமியுகேயுகே" என்ற ராமாநுஜஜன கீதாசார்யன் ஸ்ரீஸூக்திப்படியே ராமாநுஜாவதாரமான ஸ்ரீ ஸ்வாமியும் ஆஸ்தானத்தில் எழுந்தருளின காலம் முதல் இருபத்தொன்பது ஸம்வத்ஸரமாகத் தாம் தர்மஸம்ஸ்தாபனம் பண்ணினமை தோற்ற அதே சித்திரைமாஸத்தில் வெகுதனங்களை வ்யயம்செய்து ஆங்காங்குள்ள வைதிகலௌகிகபண்டிதர்களை வரவழைத்து வைதிகஸனாதனதர்மமஹாஸபையை ஆஸ்திகர்கள் அனைவரும் அகமகிழ நடப்பித்தருளி "ஸனாதன தர்மப்ரதிஷ்டா பகப்ரதானாசார்யர்" என்று உலகமெல்லாம் புகழும்படி எழுந்தருளியிருந்தார்.

அனந்தரம் பெருமாளுடைய சைத்ரோத்ஸவத்தில் புண்யகோடி விமானப்புரப்பாடு முதலான ஸகல வைபவங்களையும் ஸேவித்து அவப்ருதம் கொண்டருளினதும் மேலத்திருவேங்கடமுடையான் மங்களாசாஸனார்த்தமாக எழுந்தருளி அங்கு ஒரு மாஸகாலம் பகவத் விஷயரஹஸ்யாதிகளைக் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்து ஸ்ரீ மடத்துக்குளெழுந்தருளச் செய்தே அவ்வெழில்வேங்கடவனை வைத்தகண் வாங்காமல் ஸேவித்துக்கொண்டு ஸ்தப்தராய் நிற்குமளவில் அந்தரங்கர்கள் என்னே இது! என்று விண்ணப்பிக்க ஸ்ரீ ஸ்வாமியும் இதுதான் இவன் ஸன்னிதியில் நமக்கு இறுதியான ஸேவை என்று ஸாதித்துவிட்டு மடத்துக்கு எழுந்தருளினர்.

இவ்விதம் மஹா ப்ரபாவத்துடன் வெகுகாலம் எழுந்தருளியிருந்து தர்சனஸ்தாபனம்பண்ணின ச்ரமம்தீரவோ; ஸ்ரீ ஸ்வாமியின் காலக்ஷேப வைபவத்தை நித்யவிபூதியிலுள்ளாரும் நிரந்தரம் அனுபவிக்கவேண்டாவோ! என்ற எம்பெருமானது மனோரதம் நிறைவேறவோ; ஸ்ரீ ஸ்வாமியினுடைய ஸகலவிதமான கைங்கர்யங்களாலும் ஸந்துஷ்டனான ஸர்வேச்வரன் "உனக்கோர் கைம்மாறு நானொன்றிலேன்" என்று தடுமாறின இழவெல்லாம் தீர, நிரந்தரமாய் நிரதிசயமாயிருக்கிற ஸ்வரூப ப்ராப்தமான

நித்திய கைங்கர்யத்தை ப்ரஸாதித்தருளவேணுமென்று பாரித்தஸத்யஸங்கல்பத்தை ஈடேறச்செய்கைக்கோ; ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளம் திருநாட்டிலே குடிபுகுந்து அவ்விபூதி ப்ராப்தி விஷயமான மனோரதம் நடந்துகொண்டிருக்கச்செய்தே நித்ய காலக்ஷேபக்ரமத்தில் பகவத்விஷயத்தில் ஆழ்வார், தமது ப்ரக்ருதிஸம்பந்தத்தை மாய்த்துத் தரவேணுமென்று எம்பெருமானிடம் ப்ராத்தித்து, அதற்கு அவனை இசையச்செய்த, "மங்கவொட்டு" என்ற பாசுரவ்பாக்பானமும் "சிந்தயந்திக்கு உடம்பு தன்னடையேபோயிற்று" என்ற ஸ்ரீவசன பூஷண ஸ்ரீஸூக்திவ்யாக்யானமும் கீதாபாஷ்யத்தில் சரமச்லோகத்தில் "மோக்ஷயிஷ்யாமிமா சுச:" என்ற பாதத்தின் வ்யாக்யானமும் ஒருங்கே சேராநிற்கச் செய்தே ஆண்டாள் திருவாடிப்பூர மஹோத்ஸவம் உபக்ரமிக்க நித்யகாலக்ஷேபம் விச்சின்னமாயிற்று.

அந்தரம் அந்த மஹோத்ஸவத்தை ஸ்ரீவரமங்கைத்தாயார் தெய்வநாயகனுடன் சூடிக்கொடுத்த நாச்சியாரும் ஏகாஸனத்தில் எழுந்தருளியிருந்து திருமஞ்சனம், திவ்யபோகம், திருவீதிப் புறப்பாடு முதலான அத்விதீயமான (இம்மாதிரி மூவருமான சேர்த்தியுடன் மஹோத்ஸவம் கொண்டருளுவது வருஷத்தில் திருவாடிப்பூரத்தில்தவிர வேறு ஸந்தர்ப்பம் கிடையாது) வைபவங்களை யனுபவித்து அத்யந்த முகக்கும்படி உபலாளனம் செய்தருளினதும் ஸ்ரீ ஸ்வாமியைக்கொண்டு லீலா விபூதியைச் சிரகாலம் திருத்திப் பணிகொள்ளவேணுமென்றதன் ப்ரியத்தையும் பாராது, தமது க்ருதக்ருத்யதையை நினைத்து இனி நித்யஸூரிகள் திருவோலக்கத்தில் நித்ய கைங்கர்யத்தை ப்ராபித்தல்லது தரிக்கமாட்டாத த்வராதிசயத்தை உடைய ஸ்ரீஸ்வாமிக்கு ப்ரியத்தையே தலைக்கட்டுவதைப்பெரிதாக உகந்து நித்யவிபூதி யோகத்தைக்கொடுக்கத் தலைப்பட்ட எம்பெருமான் இவ்விருள் தருமாஞாலத்தில் அடிக்கொதிப்பை ஓர்வ்யாஜத்தையிட்டுத்தோற்றுவித்தான்.

அதுமுதல் ஸ்ரீ ஸ்வாமி தமது திருமேனியில் சிறிது நோவு சாத்திக்கொண்டிருக்க அதுஸமயம் அந்தரங்கராயிருப்பார் சிலரை அழைத்து, ஒருநாள் நித்ய விபூதியில் ஸர்வேச்வர

னுடையவும் நித்ய ஸூரிகளுடையவும் பரிமாற்றத்தையும், மற்றொருநாள் மடத்தில் புதிதாக ஸ்ரீஸ்வாமிகளை நியமிக்கும்போது நடக்கக்கூடிய வைபவங்களையும், வேறொருநாள் "புகர்கோள் சோதிப்பிரான் தன் செய்கை நினைந்து புலம்பி என்னும் நுகர வைகல் வைகப் பெற்றேன் எனக் கென்னினிநோவதுவே" என்று தம்மை நோவு பாதியாமலிருப்பதையும், இன்னொருநாள் "இராமாநுசனைத்தொழும் பெரியோர் பாதமல்லால் எந்தனுருயிர்க்கு யாதொன்றும் பற்றில்லையே" என்று சரமபர்வத்தின் காஷ்டையையும், பிறிதொரு நாள், மடத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் பெருநாடுகாணத்திருநாடு அலங்கரிக்கும்போது நடக்கும் வைபவங்களையும் ப்ரஸ்தாவித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

சரமதசையணுகவே இனி நாலைந்து தினங்களிலே என்னாளும் இல்லாத நன்னாள் ஒன்று ஏற்படும், அத்தை உடைகுலையாமல் இருந்து அனுபவியுங்கோள் என்று திருவுள்ளமுகந்து அருளிசெய்தார். இவைகளையெல்லாம் கேட்டிருந்தவடியார்கள் என்னிகழுமோ என்னிகழுமோ வென்று திகைத்து நிற்க இரண்டு நாட்காலம் ஒருவாறு கடக்கப்பெற்றது.

உடனே ஆவணிமாஸம் ௨௰௩-வது தினத்தில் ரேவதிநக்ஷத்ரம் கூடின குருவாரத்தில் ஸ்ரீவரமங்கைத்தாயார் தெய்வநாயகனுடன் திருப்பவித்ரோத்ஸவம் அவப்ருதம் கொண்டருளித் ததீயாராதனம் முடிந்ததும் ஸ்ரீ ஸ்வாமி இவ்விபூதியிலே தம்முடைய கைங்கர்யங்கள் முடிந்துவிட்டதாகத் திருவுள்ளம்பற்றி அதுமுதல் அவைகளைத் தக்கதோர் மிக்காரிடம் எக்காலமும் வழுவாமல் நடக்கும்படி ஒப்புவிக்கக்கருதித் தமது திருவுள்ளத்திற்கு அத்யந்தம் இசைந்தவராய், ரொம்பகாலமாக அரங்கநகரப்பனுக்கு உகந்தபடி திருவாராதனம் ஸமர்ப்பித்துப் போருமவராய், அத்தையே தமக்கு நிரூபகமாகவுடையவராய், திருவதரியாத்திரையில் தம்முடன் "தம்சாயேவாங்வவர்த்தத" என்று விடாது எழுந்தருளியிருந்தவராய், தமது காலக்ஷேப கோஷ்டியில் அக்ரகண்யராயிருக்கிற ஒரு ஸ்ரீவைஷ்ணவரைத் தம்மிடமழைத்து, நீரேயினி இந்த ஸ்தானத்தை நிர்வஹிக்கக்

கடவீரென்று நியமித்துத் தமது திருக்கைகளால் காஷாயத் திருப்பரிவட்டத்தை அவரது திருமுடியில் ப்ரஸாதித்தருளினார்.

அவரும் தமது பாரதந்த்ர்ய நிஷ்டையினால் அங்கீகரித்தருள, உடனே வானமாமலைப்பெருமாள் ஸன்னிதியிலிருந்து ஸகல பரிகரங்களுடன் திருமாலை, பரிவட்டம் முதலான ப்ரஸாதம் வரத் தாம் அதைப்பெற்றுக்கொண்டு தமது நியமனம் பெற்றவருக்கும் ஸாதிக்கச்செய்து அர்ச்சகமுகேந வானமாமலை ராமாநுஜஜீயர் என்று அருளப்பாடு செய்தருளினார். இவ்விதம் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்ட சின்னஸ்வாமிக்கு மறுநாள் ஆச்ரமஸ்வீகாரம் முதலான க்ரியாகலாபங்களைச் செய்துவைத்துத் தாமும் அதைக்கண்டு களித்திருந்தார்.

அதுமுதல் அந்தர்முகமான பகவத்குணாநுபவம் வெகுவாக நடவாநிற்கச் செய்தேயும் ஆர்த்திப்ரபந்தம், அர்சிராதிரஹஸ்யம், யதிராஜவிம்சதிகளை அறியக்கற்று வல்லரான சில ஸ்ரீவைஷ்ணவர்களைக்கொண்டு ஸேவிக்கச்செய்து தாமும் அவற்றின் அர்த்தாநுஸந்தான ஜனிதப்ரீதிபரீவாஹரூபமான தமது ஸ்ரீஸூக்திகளாலே ஸ்வாநுபவத்தைப் பஹிர்முகமாகவும் பெருக்கியருளினார்.

இவ்வாறு, இரண்டு நாள் எழுந்தருளியிருந்து, திருமேனிக்குச் சரமதசையணித்தானவாற்றை அறிந்து தம்மை ஸேவிக்கவேணுமென்று பெருவிடாய்ப்பட்ட வடியார் குழாங்களுக்கு அப்ரதிஹதமாக ஸேவை ஸாதிக்கத் திருவுள்ளமாக அவர்களுமவ்வாறே ஆபாலவ்ருத்தம் அனவரதம் ஸேவித்துப் போராநிற்க, மறுநாள் ததீயாராதனம் ஆனதும் ஸ்ரீ சின்னஸ்வாமியை முன்னிட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளத்தையனுஸரித்து பெரியகுழாமாகக் கூழ்மி ஆகாசத்தைப்பிளக்கும் த்வநியுடன் சூழ்விசும்புத் திருவாய்மொழியை ஸேவை செய்தார்கள். ஸேவை முடிந்து ஸ்ரீ ஸ்வாமி வாழித்திருநாமம் ஸேவித்ததும் இரண்டொரு நிமிஷங்களில் அபிஜித்து வேளையில் ஸ்ரீ ஸ்வாமியின் திவ்யதேஜோரூபமான தில்யாத்மாவானது மூர்த்தன்யநாடி வழியாக உத்க்ரமணமாகா நிற்க ஸ்ரீ ஸ்வாமி திருநாடு அலங்கரித்தருளினார்.

அப்பொழுது செய்தவேள்வியரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் பலர் ப்ருகுவல்லி ஆனந்தவல்லிகளை உத்கோஷியாநிற்கச்செய்தே ஸ்ரீ சின்னஸ்வாமி துடக்கமான ஸகல ஆச்ரிதவர்க்கங்களும் தாங்கள் ஓர் அரியவஸ்துவை இழந்தமையாற்றாது அளவிலா க்லேசமடைந்து ஸ்ரீ ஸ்வாமியின் சரமகைங்கர்யங்களை நடத்த வேண்டி ஒருவாறு தேறி ஸ்ரீ ஸ்வாமியின் சரம திவ்ய விக்ரஹத்திற்கு ஸமஸ்தோபசாரங்களுடன் ஸப்ததசகலசஸ்தாபன பூர்வகமான திருமஞ்சனம் திருவாராதனம் முதலிய வைப: வங்களைச் செய்து மகத்தானப்ரும்மரதமலங்கரித்து தெய்வ நாயகன் ஸன்னிதிவாசலில் ஸ்ரீ சூர்ணபரிபாலனம் செய்து அனை வருக்கும் ப்ரஸாதம் விநியோகித்து ஸ்ரீ ஸ்வாமியைத் திருப்பல் லக்குடன் ப்ரும்மரதத்தில் எழுந்தருள்வித்து வேதகோஷத்துடன் திருவீதிவலமாக வநேகமாயிர மடியார்கள் புடைசூழத் திருவரசுக்கெழுந்தருளச்செய்து அங்கு ஸ்ரீ ஸவாமியைத் திருப் பள்ளிபடுத்தும்போது “ ராமோ ராமோ ராம இதி ப்ரஜானு மபவங்கதா:, ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி ” என்கிறபடியே ஸ்ரீ ஸ்வாமி ஜகத்ரக்ஷணம் பண்ணிப்போந்தவரா கையாலே சக்ரவர்த்தித் திருமகன் வியோகத்தில் “ அபிவ்ருக்ஷா பரிம்லானு: ஸபுஷ்பாங்குர கோரகா:. உபதப்தோதகா நத்ய: பல் வலாநி ஸராம்ஸிச ”, என்றாப்போல சேதனு சேதனங்களோடு வாசியற “ ஊற்றின் கண்நுண் மணல்போல் ” நீராய் உருகிக்கண்கள் பனிக்காத வஸ்துக்களொன்றுமேயில்லை.

பின்பு ஸ்ரீ ஸ்வாமியின் சரமவிக்ரகத்தில் சாத்தியிருந்த மாலை பட்டுப்பரிவட்டங்களை ஸ்ரீ சின்னஸ்வாமிக்கு ஸாதித்து எம்பெருமானார் தர்சன ப்ரவர்த்தகர்களுக்கு அஸாதாரணமாய் அவர் முதல்கொண்டு ஓராண்வழி குருபரம்பரா க்ரமமாக சாத்திக்கொண்டு வந்ததுமான கணையாழியையும் மணவாள மாமுனிகள் ஒன்னான வானமாமலை ஸ்வாமிக்கு ஸாதித்தருளினதாயும் இம்மடத்துப்பரம்பரையில் அவிச்சின்னமாகவந்துகொண்டிருப்பதுமான உபதண்டத்தையும் ஸ்ரீ ஸ்வாமி திருமேனியில் நின்றும் வாங்கி சின்னஸ்வாமிக்கு ஸமர்ப்பித்தார்கள். பின்னர் “அப்தே ஸ்ரீமுகநாமகே தினமணௌ ஸிஹ்மம் கதே க்ருத்திகாதாராயாம் அஸிதச்சதே ரவிதினே ஷஷ்ட்யாம் ரவௌமத்

யகே, வேதாந்த த்வயபாரகோ குணநிதி: ஸ்ரீமாங்கலிக்நோமுநி: ஸவாசார்யஹ்ருதய பதாரவிந்த மபஜத் வ்யோமாத்ரியோகீச்வர:” என்று பெரியோர்களால் விண்ணப்பிக்கப்பட்ட சரமச் லோகத்தைத் திருச்செவிசாத்தி அங்கு நின்றும் அடி ஏழாத சின்னஸ்வாமியை அதே திருப்பல்லக்கில் ஸகல பரிவாரங்களுடன் எழுந்தருளப்பண்ணி வைத்துக்கொண்டு தாயையிழந்த கன்றுபோலத்தவித்து வந்தயாவரும் தாபார்த்தர்கள் தண்ணீரிலவகாஹிக்குமாப்போல சேற்றுத்தாமரை தீர்த்தத்தில் அவப்ருதமாடியதும் ஸ்ரீ சின்னஸ்வாமி மடத்தில் எழுந்தருளி ஸ்ரீ பெரிய ஸ்வாமி திருவடிகளையே சிந்தித்துக்கொண்டு ததேகமனஸ்கராகவே துஞ்சாமுனிவராக எழுந்தருளியிருந்தார்.

பின்பு திசை திசை தோறும் ஸ்ரீமுகம் விடுத்து ஸ்ரீ ஸ்வாமியின் பத்துத்திருநாளையும் முறைப்படி நடத்திப்பதினொன்றாவது திருநாளில் பார்வணவிதியையும் பன்னிரண்டாம் திருநாளில் திருநாராயணபலி கைங்கர்யத்தையும் யதாசாஸ்த்ரம் விசேஷமான த்ரவ்யங்களை விநியோகித்து நடத்தியருளினார். அன்று இராத்ரி நடந்த திருவாய்மொழிப்பெரிய துடக்கத்தையும், மறுநாள் நடந்த தீர்த்த மஹோத்ஸவத்தையும் அது சமயம் கடல் கரைபுரண்டாலொத்துப் பலவிடங்களிலிருந்தும் வந்து கூடின ஸ்ரீவைஷ்ணவத்திரளையும் அவர்களுக்கு நடந்த ததீயாராதனச் சிறப்பையும் அன்றிராத்ரி ஸ்ரீஸ்வாமி தங்கத்திருப்பல்லக்கில் திருவீதிவலம் கொண்டருளின வைபவத்தையும் ஸேவிக்கவும் வர்ணிக்கவும் ஆயிரம் கண்ணுடையிந்திரனும் அஃதிரட்டிய நாவினனனவாதிசேஷனும் ஆற்றல் பெற்றிலர் என்றால் அறிவில்ச்சிறிய மானிடர்களுக்கு நிலமில்லையென்பது கிம்புனர்ந்யாயஸித்தமிறே.

மதுரகவிமுனீந்த்ரம் மங்களாயாச்ரிதானாம்
ககனகிரிவிராஜத் பத்ரஸிம்ஹாஸனே ஸ்வே |
ஸ்வஸத்ருசமபிஷிச்ய ஸ்வேமஹிம்நி ஸ்திதம்ஸ்ரீ
கலிவிஜயிநமார்யம் யோகிராஜம் பஜாம: ||

# ஸ்ரீஸ்வாமி வாழித் திருநாமம்.

திங்களுலாமாட மங்கைத்திருப்பதியோன் வாழியே
சித்திரையில் அச்வதிநாள் சிறக்கவந்தோன் வாழியே
சங்கதமாம் ஞானபக்தி தகவுடையோன் வாழியே
சடகோபமாமுனிவன் தாளிணையோன் வாழியே
பங்கமிலா விருமறைநூல் பகர்ந்தளிப்போன் வாழியே
பட்டர்பிரான் யோகிபதம் பணிந்துய்ந்தோன் வாழியே
எங்குமுள்ள அடியார் கட்க்மிதமுரைப்போன் வாழியே
எழில் கலியன் மாமுனிதாள் இனிதூழி வாழியே.

ஸ்ரீ வாகமஹாத்ரியோகிநே நம:

சுபம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# புண்யகோடி விமானத்திருநாமம்

(சங்கராபரண ராகம்)

## பல்லவி.

வரமங்கை நாதனுக் கென்றே
வண்ணப் புண்ணிய விமானம்

## அனுபல்லவி.

சிரமங்கைவைத்துலகோர்—சேவித்து வியப்பெய்த
செல்வக்கலியன் வான—மாமலை யோகிசெய்தார்—வர...

## சரணங்கள்.

கண்டோருல்லேகிக்கவே—கனகமலேயோவிது
கற்பதருவோவன்றிக்—கார்முகில் வண்ணனுடன்
த்ருதம்—கொண்டுவைதேகியைப்—பண்டயோத்தியில்ச் சேர்த்த
புண்டரீகை யுகந்த—புஷ்பகந்தானோவென—வர...

ஸ்ரீ காந்தன் சித்தப்படி—சேவகனும் தோழனும்
சிங்காதன மாகவும்—ஜயக்கொடி யாகவும்,
த்ருதம்—சிரணி விதானமும்—திருவால வட்டமுமாய்
சிறப்பாயமை கின்ற—திருவடிதானோவென—வர...

தெய்வநாயகனையும்—ஸ்ரீவர மங்கையையும்
சிறந்த கைங்கரியத்தால்—திருவுள்ளம் மகிழ்விக்க,
த்ருதம்—சிந்தனை பாரித்து—எந்தை கலியன்முனி
அந்தம் மிகுந்த விந்த—நந்தவிமான மிட்டார்—வர...

திவ்ய தம்பதிகளின்—திருமேனி யொளியோடும்
திருவாபரணங்களின்—திகழ்கின்ற சோதியோடும்,
த்ருதம்—பொற்பமை பொன்னினொளி—நாற்புறங்களும் வீசப்
புண்யகோடி விமானம்-கண்ணைவிட்டகலாதே—வர...

சுபம்.

ஸ்ரீ

# அநுபந்தம்.

## ஸ்ரீவானமாமலைமடம் 25-வது பட்டம் ஸ்ரீகலியன் ராமாநுஜஸ்வாமியின் முக்ய கைங்கர்யங்கள் முதலானவை.

---

### 1. வாங்கப்பட்ட கிராமங்கள்.

1. மலையடிப்புதூர் கிராமத்தில் அநேகபாகங்கள்.
2. சாலைப்புதூர் கிராமம்.
3. பொத்தசுத்திக் கிராமத்தில் சில பாகங்கள்.
4. கொத்தங்குளம்.
5 கும்பகோணம் பக்கம் ரெட்டிப்பாளயம் கிராமம்.
6. வானமாமலைக்குப் பக்கத்திலுள்ள மடத்துக்கிராமங்களுக்குச் சேர்ந்ததாக சுமார் 200 ஏக்கர்.
7. கோயிலம்மாள்புரத்தில் சிலபாகம்.

ஆக மூன்று லக்ஷம் வரை மதிப்புள்ளது.

### 2. விசேஷ ஸமர்ப்பணைகள்

1. திருவனந்தபுரம் மஹாராஜாவால் ப்ரதிவருஷமும் எக்காலமும் ஸ்ரீஸ்வாமி ஸன்னிதிக்குச் சேரும்படி ரூ. 200
2. ஊத்துமலைஜமீனிலிருந்து ப்ரதிவருஷமும் ரூபாய் 250
3. பரதபூர் திவானால் ஸ்ரீஸ்வாமி வானமாமலையில் எழுந்தருளியிருக்கும்போது இவ்விடம் வானமாமலைக்கு வந்து ஸமர்ப்பித்தது ரூபாய் 10000 பதினாயிரம்.
4. ரீவா மஹாராஜாவால் தங்கம் வெள்ளியாலிழைத்த ஒரு பெரிய அம்பாரியுடனும் ஆபரணங்களுடனும் ஒரு யானை ஸமர்ப்பிக்கப்பட்டது.
5. இதர ஸம்ஸ்தானங்களில் ஸமர்ப்பிக்கப்பட்ட யானைகள் இரண்டு.

## 3. அசல் திவ்ய தேசங்களில் செய்தருளின கைங்கர்யங்கள்:

1. திருவரங்கம் பெரிய கோயிலில் திருமணத்தூண் ஜீர்ணோத்தாரணம்.
2. ஸ்ரீரங்கம் வானமாமலை மடத்தை ரூபாய் ஏழாயிரத்திற்கு மேல்சிலவு செய்து பரிஷ்கரிப்பித்தது.
3. ஆழ்வார்திருநகரியில் பழைய மடத்தை 6000 ரூபாய் சிலவு செய்து ஜீர்ணோத்தாரணம் செய்தது.
4. பட்டர் மடத்தை ரூபாய் 5000த்திற்குப் புதிதாக வாங்கியது.
5. திருநெல்வேலி மடத்தில் ஜீர்ணோத்தாரணமும் பரிஷ்காரமும் ரூபாய் 12000த்திற்கு மேல்.
6. வடகரை மடம் ஜீர்ணோத்தாரணம்.
7. ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் ஸன்னிதிக்கு ஒரு பெரிய கொம்பன் யானை ஸமர்ப்பித்தது.
8. ஸ்ரீவில்லிப்புத்தூர் மஹாப்ரதிஷ்டையில் ஏழுநாள் அஹோராத்ரம் பூர்ணமாகத் ததீயாராதனம் நடத்தியருளினது.
9. நாதன் ஸன்னதியில் திருவாபரணங்கள் வெள்ளிப்பாத்ரங்கள் நித்ய உத்ஸவாதிகள் நித்ய ததீயாராதனம் ஸன்னதிமடங்களில் சில ஜீர்ண உத்தாரணமும்செய்தருளியது.
10. நாதன் ஸன்னதிக்கு விசேஷமாக மஹாப்ரதிஷ்டை சுமார் 8000 ரூபாய் சிலவில் செய்தருளியது.
11. திருநறையூர் நாச்சியார் கோவிலில் திருவாபரண கைங்கர்யத்திற்கு சுமார் ரூ 2000 உதவியது.
12. ராஜமன்னார் கோவில் மடம் ஜீர்ணோத்தாரணம் ரூபாய் 2000த்திற்கு மேல்.
13. ப்ரும்மதேசம் மன்னார் கோவிலில் நடந்த ப்ரதிஷ்டைகளுக்கு விசேஷமாக உபகரித்தது.

14. அத்தாழநல்லூர் மஹாப்ரதிஷ்டைக்கு பூர்ணமாகரூபாய் ஐயாயிரம் சிலவு செய்தருளியது.

15. தூத்துக்குடி வைகுண்டபதி ஸன்னதி ப்ரதிஷ்டை, ததீயாராதனம், வைதிகம் முதலானவை நடத்தப்பட்டது.

16. திருக்குறுங்குடி மடம் ஜீர்ணோத்தாரணம்.

17. ஸ்ரீபெரும்பூதூர் மடம் ஜீர்ணோத்தாரணம்.

18. திருவல்லிக்கேணி மடம் புதிதாக கட்டிய வகையில் ரூ 15000 பதினையாயிரம் சிலவு செய்து அருளியது.

19. நெல்லூர் மடம் ஜீர்ணோத்தாரணம் ரூ 1500 சிலவு.

20. நூஜவீடு மடம் ஜீர்ணோத்தாரணம்.

21. கோயில் திருமலைபெருமாள் கோயில்களில் தர்சன ஸ்தாபனார்த்தமாக உபகரித்தது ரூ 12000 ரூபாய் பன்னிரண்டாயிரம்.

22. அர்குல் (நைஸாம்) ஸன்னதிப்பிரதிஷ்டை செய்வித்தது

23. குன்றி (ஆராஜில்லா) ஸன்னதிக்கு ரூ 5000 உபகரித்து ௸ ஸன்னதியின் ஸகல நிர்வாஹமும் ஸ்வீகரித்து நடந்து வருவது.

24. நைமிசாரண்யம் பிரதிஷ்டை பூர்ணமாக செய்தருளியது.

25. மால்யவான் கிஷ்கிந்தையில் கோவில் முதலானவைகளை ரூ 2000 உபகரித்து நிர்வஹித்தருளியது.

26. திருநாராயணபுரம் மடம் ஜீர்ணோத்தாரணம்.

27. பம்பாயில் பெரியதொரு தோதாத்திரி ஸ்தானம் ஏற்படுத்தியது.

28. ஸ்ரீத்வாரகையில் பெரியதொரு தோதாத்திரி ஸ்தானமும் மண்டபமும் செய்வித்தது.

29. காசியில் ராஜகாட்டில் மஹாதனஸம்பத்தியுடன் கூடின தோதாத்ரி ஸ்தானம் ஏற்படுத்தியது.

30. பிருந்தாவனம், மால்தா, அயோத்தி, ஹரித்வார், கான்பூர், பிரயாகை முதலியவனேகவிடங்களில் தோதாத்திரி ஸ்தானத்தை புதிதாக ஸ்தாபித்தருளியது.

## 4. ஸ்ரீவானமாமலையில் ஸ்ரீஸ்வாமியின் கைங்கர்யங்கள்.

1. மங்களகிரி என்ற தோளுக்கினியன் பிரபையுடன்.
2. வெள்ளித்தோளுக்கினியன் தண்டாயங்களுடன்
3. ஸ்வர்ண ஸ்ரீவைகுண்ட திவ்யவிமானம்
4. பெரியபெருமாளுக்குத் தங்கமயமான ஐந்துதலை ஆதிசேஷன்
5. தங்கத்திருவிளக்கு (பெரிய குத்துவிளக்கு)
6. தங்கத் திருப்படிக்கம்
7. தங்கத் திருக்காவேரி
8. ஸ்ரீவரமங்கைக்கு தங்கவட்டில் 5 (ஐந்து)
9. தங்கவட்டக்கும்பா
10. தங்கக்கற்பூரத்தட்டு
11. அரங்கநகரப்பனுக்கு தங்கவட்டில் 5 (ஐந்து)
12. ஷை கற்பூரத்தட்டு
13. தங்கம் வெள்ளியிழைத்ததிருமஞ்சனப் பெரியமசேரி
14. பெரிய பெருமாளுக்கு பெரிய முழுப்பவுன்மாலை
15. தாயாருக்கு கல்லிழைத்த பெரிய மாங்காய்மாலை
16. தாயாருக்குப்பெரிய பவுன்மாலை
17. தெய்வநாயகனுக்கு பெரிய பவுன்மாலை
18. ரீவாமகரகண்டிகை
19. பெரிய பெருமாளுக்கு வைரத்திருமண்காப்பு
20. தாயாருக்கு வைரத்திருவாபரணங்கள், தோடு, அட்டிகை பதக்கம் முதலியவை
21. சிறிய திருவாபரணங்கள் அளவிலாதது
22. தங்கமயப்பெரியபுண்யகோடி விமானம்
23. அநேக ஆயிரம் மதிப்புள்ள தகடிபீதாம்பரங்கள்.

## 5. உள்ளூரில் செய்த திருப்பணிகளும் பிரதிஷ்டைகளும்.

1. வாஹனங்கள் இருக்கும்படியான மண்டபம்
2. வீரப்பநாயக்கன் மண்டபம் தளவரிசை
3. ஸ்ரீபலிமண்டபம் சில பாகங்கள் தளவரிசை
4. திருவண்ணாழி ப்ரதக்ஷிணம் தளவரிசை பூர்ணமாக.
5. உடையவர் மணவாளமாமுனி சன்னிதி மண்டபம் தளவரிசை
6. த்வஜஸ்தம்பத்தடி முதலிய விடங்களில் கல்த்தளவரிசை
7. ஸ்ரீவைகுண்ட திவ்யவிமான மஹா பிரதிஷ்டை சுமார் ரூ (50000) ஐம்பதினாயிரம்
8. ஸ்ரீக்ருஷ்ணன் ஸன்னதி பூர்ணமாகக்கட்டி வைத்துப் பிரதிஷ்டையும் செய்துவைத்தது சுமார்ரூபாய் 8000 எண்ணாயிரம்.
9. உபயநாச்சிமார் ஜடிபந்தன பிரதிஷ்டை
10. தெற்குத்திருவேங்கடமுடையான் ஸன்னிதிப்பக்கத்தில் சுமார் ரூ 25000க்கு மேல் சிலவு செய்து கடைகள் கட்டி வைத்தது.
11. சேற்றுத்தாமரைக்குள்ளிருக்கும் தடாகத்தை சுமார் 5000 ரூபாய் சிலவு செய்து தூர்எடுத்து ஜீர்ணோத்தாரணம் செய்தது.
12. எண்ணெக்கிணர் ஜீர்ணோத்தாரணம் ரூ 2000த்திற்குமேல்
13. பிரதிவருஷமும் சுமார் ரூபாய் ஆயிரம் சிலவு செய்து உபயவேதாந்த பாடசாலை ஒன்றும் வேதாத்யயநபாடசாலை யொன்றும் நடத்திவருவது
14. பிரதி வருஷமும் பிரதம ஸ்வாமி உத்ஸவத்தை பலவிடங்களிலிருந்தும் வித்வான்களை வரவழைத்து பெரியவித்வத்ஸபையையும் பரீக்ஷாதிகளையும் விசேஷததீயாராதனத்துடன் நடத்திவருவது.
15. ஸர்வவிதமான எண்ணிறந்த புஸ்தகங்களை வரவழைத்து பெரிய சரஸ்வதிசாலையையும் ஆயுர்வேத ஔஷதசாலையையும் வைத்து விசேஷமாக எல்லாருக்கும் உபகரித்தருளினது.

## 6. அதிகப்படியாக ஏற்படுத்தப்பட்டதும் பரிஷ்கரிக்கப்பட்டதுமான உத்ஸவங்கள்.

1. ஆண்டாளுக்கு ஆடி மாஸத்தில் 10 நாள் உத்ஸவம் புதிதாக நடத்தியருளியது.
2. ஆவணி மாஸத்தில் திருப்பவித்ரஉத்ஸவம் சாமான்யமாகவிருந்ததை மஹாபிரதிஷ்டைக்கு ஒப்பாக ஜபஹோமபாராயணுதிகளுடனும் அவப்ருதத்துடனும் நடத்தியருளினது.
3. புரட்டாசி மாஸம் நவராத்திரி உத்ஸவத்தில் மண்டபவிதானம் முதலியவலங்காரங்களைச் செய்வித்து உயர்ந்தசங்கீத வித்வான்களை வரவழைத்து தாயார் திருவுள்ளத்தை விசேஷமாக அபிநந்திக்கச்செய்தருளியது.
4. பங்குனி உத்ஸவம் முதலிய பெரிய உத்ஸவங்களில் ததீயாராதனம் பெரிய மேளவாத்தியங்கள் இவைகளால் எல்லோரையும் எல்லா விதத்திலும் ஆனந்திக்கும்படி செய்தருளியது
5. அசலூர்களில் பெருமாள்கோவில் திருவல்லிக்கேணி ராஜமன்னார்கோவில் முதலான திவ்ய தேசங்களில் பிரதி வருஷமும் மடத்திலிருந்து விசேஷமாக மண்டகப்படி நடத்தியருளியது.
6. ஆங்காங்கு சில்லரையாக ஜீர்ணோத்தாரணங்களும் கிராமங்களின் அபிவிருத்திக்கான காரியங்களும்மேலத்திருவேங்கடமுடையான் ஸன்னிதி புஷ்பதோட்ட கைங்கர்யங்களும் முதலானவை அனேகங்கள்
7. ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார்திருநகரி முதலான பலவிடங்களில் மடத்திற்கு ஏற்பட்டிருந்த மரியாதை முதலானவைகளை யதாபூர்வம் ஸ்தாபித்தருளியது விசேஷமாகும்.

ஸ்ரீவராகமஹாத்ரியோகிநே நம:

சுபம்.

குறிப்பு :-

---

ஸ்ரீஸ்வாமி விஷயமாக ஆங்காங்குள்ள மகா வித்வான்களால் செய்யப்பட்ட க்ரந்தங்கள் பல அச்சிடவேண்டியிருப்பதாலும், இன்னும் மற்றெல்லா ஸ்வாமிகளுடைய வைபவங்களையும் அச்சிடவேண்டியதை முன்னிட்டும் இப்புஸ்தகத்திற்கு கிரயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 1. (ஒன்று)

ADDRESS:—

THE MANAGER,
S. V. M. Sanskrit Patasala,
NANGUNERI,
Tinnevelly District,
(S. INDIA.)